தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 13

09.04.2023



நன்னீர் மீன்

12

அதிக இலாபம் தரும் வெண்டைக்காய்

18

கோடை காலமும் கறவை மாடுகளும்

20

# தங்க முதலீடுக்கு உகந்த நேரமா?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
09.04.2023

# அகதியாகச் சென்று ஸ்பைருலினா உற்பத்தியில் சாதிக்கும் நம்மவர்



- பி.பார்த்தீபன் -

விண்வெளிக்குச் செல்லும் விஞ்ஞானிகள், பல நாட்கள் அங்கு தங்கி ஆய்வுப் பணியில் ஈடுபடும்போது, சாப்பாட்டிற்குப் பதிலாக, "ஸ்பைருலினா கேப்சூல்"கள் தான் உட்கொள்கின்றனர். நம் உடலுக்குத் தேவையான புரதச்சத்தை அளித்து, நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்தி, உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் போன்றவற்றிலிருந்து பாதுகாக்க உதவும். இதனால் ‘ஸ்பைருலினா ஒரு ஹசூப்பர் உணவு’ என்று அழைக்கப்படுகிறது. தமிழகத்தில் நம்மவர் ஒருவர் இதன் உற்பத்தியில் சாதிக்கின்றார்...

இலங்கையில் போர் தீவிரமடைந்தி ருந்த 1980 களின் பிற்பகுதியில் அனைத்தையும் இழந்து தமிழகத்துக்கு அகதியாக சென்று தஞ்சமடைந்தவர்தான் க.இரத்தினராஜசிங்கம். தமிழகத்தில் சுருள்பாசி எனப்படும் ஸ்பைருலினா தயாரிப்பில் இப்போது அசத்திக்கொண்டிருக்கின்றார். இதன்மூலம் பல உற்பத்திகள் கிடைப்பதுடன், தமிழக முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு சிறந்த ஊட்டச்சத்தான உணவாகவும் அது திகழ்கிறது.

தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சுருள்பாசி வளர்ப்பில் பயிற்சியளித்துக்கொண்டிருக்கின்றார் இரத்தினராஜசிங்கம். இலங்கையிலும், பொருளாதார நெருக்கடி ஊட்டச்சத்து குறைபாட்டினால் மக்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய தருணத்தில் இங்கும் அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகச் சொல்கிறார் இரத்தினராஜசிங்கம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரத்தினராஜசிங்கம் உதயன் பத்திரிகையில் செய்தியாளராகவும், புகைப்படக்கலைஞராகவும் பணியாற்றியவர். போர் காரணமாக தமிழகத்தில் தஞ்சமடைந்தவர். சென்னையிலிருந்து சுமார் 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாவலூர் பகுதியில் தனது



சுருள்பாசிப் பண்ணையை அமைத்து சாதித்துக்கொண்டிருக்கின்றார். அந்த பண்ணைக்கு மேலதிகமாகச் சுருள்பாசியிலிருந்து மேலும் பல பெறுமதி சேர்ந்த ஊட்டச்சத்துள்ள உப உணவுப் பொருட்களையும் அவர் தயாரிக்கின்றார்.

அவரது அனுபவம், அவர் சாதித்தவை எம்மவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், "தமிழர் பொருண்மியம்" சார்பில் அவருடன் பேசினோம். அவர் தந்த தகவல்கள் பயனுள்ளதாகவும் இருந்தன. அவற்றைப் பொருண்மியம் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம். இவை தொடர்பில் வாசகர்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால், அவற்றுக்கும் அவர் பதிலளிப்பார்.

### தமிழக அகதி முகாம்களில் ஊட்டச்சத்துப் பிரச்சினை..

"வீடிழந்து நாடிழந்து அகதிகளாக இந்தியா வந்தபோது எம்மை வரவேற்று வாழ்வளித்தது தமிழகம்தான். தமிழகத்தில் அப்போது ஈழத் தமிழர்களுக்காக 112 முகாம்கள் இருந்தன. இங்கு வாழும் மக்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. இதற்காக வெளிநாடுகளிலிருந்து நிதி வந்துகொண்டிருந்தது. அந்த நிதி 2000 ஆம் ஆண்டு தடைப்பட்டது. இதனால் ஊட்டச்சத்துக் கொடுக்கும் பணியும் தடைப்பட்டது. இதனால், கர்பிணிப் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

தடைப்பட்ட ஊட்டச்சத்துக்கு மாற்றாக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற தேடலில் ஈடுபட்டபோதுதான் ஸ்பைருலினா என்ற சுருள்பாசி குறித்து அறிய முடிந்தது. இதற்காக முதற்கட்டமாக எட்டுப் பேருக்கு

மதுரையில் பயிற்சி கொடுத்தோம். இதனை நாம் உற்பத்தி செய்து முகாமிலுள்ள எமது மக்களுக்குக் கொடுக்கத் தொடங்கியபோது பெருமளவு மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. கர்ப்பிணிப் பெண்களின் பாதிப்பு குறைந்தது. அல்சர் போன்ற பல நோய்களிலிருந்து அவர்கள் மீண்டார்கள். இதன்மூலம் சுருள்பாசி சிறந்த ஊட்டச் சத்துள்ள உணவு என்பதைப் புரிந்துகொண்டோம்.

சுமார் நான்கு வருடங்கள் எமது மக்களுக்கு மட்டுமே இதனைச் சத்துணவாக கொடுத்துவந்தோம். இதற்கான பயிற்சியையும் அவர்களுக்குக் கொடுத்தோம். ஆனால், இந்திய மக்களும் இதனை பயன்படுத்த விரும்பியதால், அவர்களுக்கும் இத்துறையில் கடந்த பத்து வருடங்களாக பயிற்சியளித்து வருகின்றோம். சுமார்




2,500 பேருக்கு இதுவரையில் பயிற்சியளித்திருக்கின்றோம். இதில் 70 பேர் தமிழகத்தில் சுருள்பாசிப் பண்ணைகளை அமைத்து அவற்றை உற்பத்தி செய்கின்றார்கள். இதில் 700 க்கும் அதிகமானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்றார்கள்"

- இவ்வாறு தெரிவிக்கின்றார் இரத்தின ராஜசிங்கம்.

### சுருள்ப் பாசியிலிருந்து பெறக்கூடிய பலன்கள்

சுருள்பாசி புரதம் அதிகமுள்ள உணவுத் தாவரம். சுலபமாக ஜீரணமாகும். உடலுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆரோக்கியம் தரும் உணவாக உள்ளது. அழகுசாதனப் பொருட்களைத் தயாரிக்கவும் இதனைப் பயன்படுத்தலாம். இவ்வாறு இதன் பயன்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

இதனைவிடக் குளிர்பானம், பிஸ்கட், சேமியா, அப்பளம், கேக், சொக்லேட் போன்ற உப உணவுப் பொருட்களையும் இதனைக் கொண்டு தயாரிக்க முடியும். அவை சுவையானதாகவும், ஊட்டச்சத்து நிறைந்தவையாகவும் இருப்பதால் சிறுவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் பயனுள்ள செலவு குறைவான ஓர் உணவுப் பொருளாக இருக்கும்.

சவர்க்காரம், தலைக்கு பயன்படுத்தும் எண்ணெய், பேஷியல், சம்பு போன்ற அழகு சாதனங்களைத் தயாரிக்கவும் இதனைப் பயன்படுத்தலாம்.

இவைபோக, கால்நடைகளுக்கான உபஉணவாகவும் இதனைக் கொடுக்கலாம். இதனால் பாலின் தரம் கூடுகின்றது. கோழிகள் இடும் முட்டையின் ஊட்டச் சத்தும் அதிகரிக்கின்றது.

ஸ்மைருலினா மூன்று கோடி வருடங்களுக்கு முன்னரே தோன்றியது. நீலப் பச்சை பாசியினம் சுற்றுச் சூழல் கூறுகளில் உண்டான மாறுதல்களையும் தாங்கி வளரும் திறன்படைத்த நுண்ணுயிர் பாசி. தாய்ப்பாலில் காமாலினோலினிக் என்ற அமிலம் உள்ளது. அடுத்துதாக அதிகமாக இருப்பது இந்த சுருள்பாசியில்தான்.

ஸ்பைருலினாவில் உள்ள ஊட்டச்சத்துக்கள் மனித உடலில் உள்ள செல்களால் சுலபமாக உறிஞ்சப்படும் நிலையில் உள்ளன. மற்ற உணவுப் பொருள்களை விட அதிக புரதச்சத்து நிறைந்துள்ளது. உடல் ஆரோக்கியத்தை பெருக்கும் மிக முக்கியமான உணவாகத் திகழ்கிறது. மீன் உணவில் புரதச்சத்து அதிகம் இருப்பதற்கு அவை பாசிகளை முக்கிய உணவாகக் கொள்வதே காரணமாகும். இதை உணவாகப் பயன்படுத்தலாம்.

விண்வெளிக்கு செல்லும் விஞ்ஞானிகள், பல நாட்கள் அங்கு தங்கி ஆய்வுப் பணியில் ஈடுபடும்போது, சாப்பாட்டிற்கு பதிலாக, "ஸ்பைருலினா கேப்சூல்"கள் தான் உட்கொள்கின்றனர். அந்தளவுக்கு அது சக்தியைக் கொடுக்கக்கூடியது என்பது அவர்களுடைய கணிப்பு.

### கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு இதுதான்..




இந்த "ஸ்பைருலினா" கண்டுபிடிக்கப்பட்டதற்கான காரணம், தென் ஆப்பிரிக்காவில் கடும் பஞ்சம் ஏற்பட்ட போது, மடகாஸ்கர் பகுதியில் உள்ளவர்கள், தண்ணீரை மட்டும் குடித்து உயிர் வாழ்ந்தனர். இதை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், தண்ணீரில் ஸ்பைருலினா என்ற பச்சைய பொருள் இருப்பதைக் கண்டனர்.

இதில் புரதம் 65%, கொழுப்பு 5%, கார்போஹைட்ரேட் 20% உள்ளது.

நம் உடலுக்குத் தேவையான புரதச சத்தை அளித்து, நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்தி, உயர் இரத்த அழுத்தம், புற்று நோய் போன்றவற்றிலிருந்து பாதுகாக்க உதவும். எனவே ஸ்பைருலினா ஒரு ஹசூப்பர் உணவு' என்று அழைக்கப்படுகிறது.

ஆன்டிஆக்ஸிடண்ட்கள் (Antioxidants) நிறைந்தது ஸ்பைருலினா. இவை, நம் செல்கள் சேதமாகாமல் தடுக்கும். இரத்தத்தில் சீனி, கொலஸ்ட்ரால் அளவுகளைக் குறைக்கும். 15 மடங்கு அதிகம் உள்ள இரும்புச் சத்து இரத்தச் சோகை நோய் வராமல் தடுக் கிறது. இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கிறது. இதிலுள்ள துத்த நாகச்சத்து முடி உதிர்தலை தடுக்கிறது.

### சுருள்பாசி பண்ணைகளை எவ்வாறு அமைக்கலாம்?

சுருள்பாசி வளர்ப்பை பெரிய அளவிலும் செய்யலாம். சிறிய அளவில் நமது குடும்பத் தேவைகளுக்காக மீன்தொட்டிகளிலும் வளர்க்கலாம். சற்றுப் பெரிய அளவில் செய்வதற்கு முதலில் இடம்வேண்டும். ஒரு ஏக்கர் நிலமிருந்தால் போதும். அனைத்து வசதிகளுடனும் பண்ணையை அமைக்கலாம். நீங்கள் தேர்ந்தெடுத்த இடம் பள்ளமாக இருக்கக்கூடாது. சற்று மேடாக இருக்க வேண்டும். நீர் வழிந்தோடும் படியாக இருக்க வேண்டும். வளர்ப்புப் பகுதிகளில் தண்ணீர் தேங்கக் கூடாது.

நிலத்துக்கு அடுத்ததாக நீர் முக்கியம். இதற்கு அதிக நீர் தேவையில்லை. வேறு எந்த நுண்ணுயிரும் கலக்காத, மாசற்ற, நிலத்தடி நீர் வளர்ப்பு 2-25 சென்ரி மீற்றர் உயரம் நிற்கும் அளவுக்கு நீர் கிடைத்தால் போதும். தரிசு நிலங்களில் கூட இதனை தாராளமாக வளர்க்கலாம்.

சூரிய ஒளி தினசரி 12 மணி நேரம் இருக்க வேண்டும். ஆண்டுக்கு ஒன்பது மாதங்களாவது வளர்ப்பை மேற்கொள்ளும் வகையில் கோடை காலத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மிதமான காற்று இருப்பது நல்லது. பேய்க்காற்றும் புயலும் பாதகமானதாகும். இவற்றின் தாக்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காற்று அதிகமாக இருக்கும் பகுதிகள் என்றால், தடுப்பு வேலிகளை அமைத்து காற்றின் தாக்கத்தை குறைத்துக்கொள்ளலாம்.

இவ்வாறு குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் தரக்கூடியதுதான் சுருள்பாசி. சுருள்பாசியை அப்படியே விற்பனை செய்வதிலும் பார்க்க, மதிப்புக் கூட்டி விற்பளை செய்தால் அதிக இலாபம் கிடைக்கும் என்றும் கூறுகின்றார் இரத்தின ராஜசிங்கம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777 276 949

## முதலீடுகளுக்கான திட்டங்களும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும்!

புலம்பெயர்ந்த மக்களிடமிருந்து பெருமளவு முதலீடுகளை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கும் நிலையில், அதற்காக எவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களை முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கைப் பிரதிநிதி கந்தையா கஜன் தெரிவித்திருக்கின்றார். “முதலீடு செய்வதற்கு வாருங்கள்” என வெறுமனே அழைப்பது பிரச்சினைக்கான தீர்வாக இருக்காது. எவ்வாறான துறைகளில் முதலீடு செய்யலாம், முதலீட்டுக்கான பாதுகாப்பு எவ்வாறு உறுதிப்படுத்தப்படும் போன்ற கேள்விகள் புலம்பெயர்ந்த மக்களிடம் இருக்கின்றன. இவற்றுக்கான பதிலைக் கடந்த வாரம் “தமிழர் பொருண்மியம்” வார மலரில் கந்தையா கஜன் தெரிவித்திருந்தார்.

“முதலீட்டாளர்களைக் கொண்டுவருவது மட்டும் எங்களுடைய வேலை இல்லை. முதலீடுகளுடன் வருபவர்கள் சரியான முறையில் பயன்பெற வேண்டும். அதேபோல மக்களும் சரியான முறையில் பயன்பெறவேண்டும். இதுதான் எங்களுடைய திட்டம். இது உண்மையில் ஒரு நீண்டகாலத் திட்டம். ஒரு நாளில் முடியும் வேலை அல்ல” என்று அவர் தெரிவித்திருப்பது நம்பிக்கை தருவதாக இருக்கின்றது. எவ்வாறான துறைகளில் முதலீடுகளைச் செய்யலாம், அதற்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் என்பவற்றையும் ஆராய்ந்து முதலீட்டாளர்களை வழிநடத்துவதற்கான உபாயங்களையும் அவர் வகுத்திருப்பதாகத் தெரிகின்றது. இதன்மூலம் ஒரே துறையில் பலர் முதலீடுகளைச் செய்வதால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்க்க முடியும்.

அதேவேளையில், முதலீடுகளுக்கான பாதுகாப்புக் குறித்த அச்சமே பலருக்கும் உள்ளது. நாடு ஸ்திரமற்ற ஒரு நிலையில் இருக்கும்போது இவ்வாறான அச்சங்கள் ஏற்படுவது இயற்கையானதுதான். இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த வருடம் காணப்பட்ட ஸ்திரமற்ற நிலை இப்போது இல்லை. அதேவேளையில், முதலீடுகளைப் பாதுகாப்பதற்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்கள் உள்ளன. இந்தச் சட்டங்கள் குறித்து முதலீட்டாளர்களுக்கு விளக்கமளிப்பதும், அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் முக்கியம். முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அது அவசியமானது. அது தொடர்பாகவும் தாம் கவனம் செலுத்தியிருப்பதாக கந்தையா கஜன் தெரிவித்திருக்கின்றார்.

எமது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். அதிலும் புலம்பெயர்ந்த எம்மவர்களின் முதலீடுகள் பொருளாதாரத்தை மட்டுமல்லாது, சமூகத்தையும் பலப்படுத்துவதாக அமைந்திருக்கும். புதிய பொறுப்பை ஏற்ற இரண்டு மாதங்களில் பல விடயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக கந்தையா கஜன் தெரிவித்திருப்பது நம்பிக்கையளிக்கும் விடயம். பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளத் தவறக்கூடாது.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### தன்னிறைவுப் பொருளாதாரம்

சுவாமிநாதன் சர்மா எழுதிய “தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் பயணம்” என்ற கடந்த வாரம் “தமிழர் பொருண்மியம்“ வெளியிட்டிருந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த, “நம்மிடம் இருக்கின்ற வளத்தை நாம் புறந்தள்ளி இறக்குமதியில் பாரியளவில் தங்கியிருந்தமையினால் இலங்கை உடனடியாக எதிர்பார்க்கின்ற உற்பத்தித்திறனைப் பெற்றுக்கொள்வது கடினமாகத்தான் இருக்கப்போகிறது. ஆகவே உள்ளூர் உற்பத்தியைக் கட்டி எழுப்புவதற்கு எவ்வாறான குறை பாடுகள் காணப்படுகின்றன என்பதனை முதற்கட்டமாக இனங்காணுவது அவசியமாகின்றது” என்ற கருத்து முக்கியமானது. பொருளாதாரக் கொள்கையை வகுப்பவர்கள் முக்கியமாகக் கவனத்திற் கொள்ள வேண் டிய கருத்து இது. இது போன்ற பொருளாதாரத்துறை மாணவர்களுக்கு பயனுள்ள கட்டுரைகளை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**எம்.நிஷாந்தினி, - வந்தாறுமுனை, மட்டக்களப்பு.**

### நன்னீர் மீன் வளர்ப்பு

கடந்த வாரம் வெளிவந்திருந்த நன்னீர் மீன் வளர்ப்பு எமக்கு சாத்தியமா? என்ற கட்டுரை பயனுள்ள பல விடயங்களைத் தந்திருந்தது. மீன்பிடியை ஒரு தொழிலாகக் கொள்வதற்கு கடற்கரையில்தான் நாம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. எங்கே இருப்பவர்களும் அதனை ஒரு தொழிலாக செய்ய முடியும் என்பதை அந்தக் கட்டுரை தெளிவாக விளக்கியிருந்தது.

எமது பொருளாதார மேம்பாட்டுக்கு நன்னீர் மீன்பிடியில் இருக்கக்கூடிய வேலை வாய்ப்புக் குறித்த நம்பிக்கையைக் கொடுப்பதாகவும் இது அமைந்திருந்தது. இது போன்ற விடயங்களைத்தான் தமிழர் பொருண்மியத்தில் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

**மதன்குமார் மார்க்கண்டு - வவுனியா**

### தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...

## சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------
**முகவரி** - ----------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------
**செலுத்திய தொகை** - ------------------------------
**செலுத்திய திகதி** - -------------------------------



# தங்க நகை விலை

**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,67,500 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,82,650 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி** - அரசாங்கம் அதிரடியாக விலைகளைக் குறைக்கின்றதே? மக்களுக்கு சலுகைகளை வாரி வளங்குகின்றதா? இது தேர்தலுக்கான உபாயமா?

**பரமு பிரியதர்ஷன்**
**கிளிநொச்சி.**

**பதில்** - எரிபொருட்களும், எரிவாயுவும் அதிரடியாக குறைக்கப்பட்டிருப்பது தெரிந்ததுதான். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று - டொலரின் பெறுமதி குறைந்திருப்பது. இரண்டு - சர்வதேச சந்தையில் விலை சற்று குறைந்திருப்பது.

ஆனால், எரிபொருள் விலை குறைந்திருப்பதால் போக்குவரத்து கட்டணங்கள் குறைந்திருக்கின்றதா என்று பார்த்தால் அவ்வாறு எதுவும் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. ஓட்டோ கண்டணம் குறையும் என்று சொன்னாலும், யாழ்ப்பாணத்தில் முன்னர் அறவிட்ட கட்டணங்களில் இன்றுவரை எந்த மாற்றத்தையும் காணவில்லை.

அதேபோல, சமையல் எரிவாயு விலை குறைந்திருப்பதால் உணவுப் பொருட்களின் விலை குறையும் எனச் சொல்லப்பட்டது. ஆனால், அதனையும் காண முடியவில்லை. மக்களும் அந்த விலையைக் கொடுத்து பழக்கப்பட்டுவிட்டதால், பெரிய விலைக் குறைப்பை அவர்களும் எதிர்பார்ப்பதாகத் தெரியவில்லை.

இது தேர்தலுக்கான ஒரு உபாயமாகத் தெரியவில்லை. ஏனென்னால் இவ்வருடத்தில் தேர்தல் ஒன்று இல்லை என்ற வகையில் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால், எதிரணியினரின் அரச எதிர்ப்புப் போராட்டங்களை இந்த விலைக் குறைப்புக்கள் பலவீனப்படுத்துவதாக இருக்கலாம்.

----------------------------------

**கேள்வி** - கோட்டாபய ராஜபக்ஷ இரசாயண உர இறக்குமதியை தடை செய்தது உள்நாட்டு உற்பத்தியில் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது?

**கோவிந்தன் சண்முகம்**
**மட்டக்களப்பு**

**பதில்** - இரசாயண உர இறக்குமதியை தடை செய்தமை தவறான நடவடிக்கை என்று சொல்ல முடியாது. ஆனால், அதற்கான மாற்று ஏற்பாடுகளை உள்நாட்டில் செய்யாமல் - போதிய கால அவகாசம் கொடுக்காமல் திடீரென தடைசெய்தமை தான் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

ஹெக்டர் கொப்பேக்கடுவ ஆராய்ச்சி நிலையத்தின் தகவலின் படி 2021 மகா போகத்தில் நெல் உற்பத்தி 53 வீத்தினால் குறைவடைய கோட்டாபயவின் இந்த அதிரடி நடவடிக்கை காரணமாக இருந்தது. அதேபோல உருளைக்கிழங்கு, மிளகாய், மரக்கறி உற்பத்திகளும் 55 வீதத்துக்கும் அதிகமாக குறைவடைந்தது. விலைவாசி உயர்வுக்கும் அதுதான் காரணம்.

இந்தக்காலப்பகுதியில் இயற்கை உரத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்னர் இந்த தடையை அமுலாக்கியிருந்தால் இந்த விளைவுகள் ஏற்பட்டிருக்காது என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**



# வடக்கின் சந்தை நிலைவரம்

| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 150/= |
| உருளைக்கிழங்கு | - 130/= |
| பச்சைமிளகாய் | - 250/= |
| தக்காளி | - 160/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 150/= |
| கோவா | - 80/= |
| கரட் | - 170/= |
| பூசணி | - 70/= |
| புடோல் | - 140/= |
| வாழைக்காய் | - 130/= |
| சின்ன வெங்காயம் | - 240/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாவற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 230/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 150/= |
| லீக்ஸ் | - 240/= |
| பீற்றூட் | - 140/= |
| கறிமிளகாய் | - 250/= |
| முருங்கைக்காய் | - 1700/= |
| போஞ்சி | - 220/= |



# நாணய மாற்று வீதம்

**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 208/= |
| கனடா டொலர் - | 231/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 339/= |
| ஜப்பான் யென் - | 2.3/= |
| சிங்கப்பூர்டொலர் - | 238/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 388/= |
| சுவிஸ் பிராங் - | 342/= |
| அமெரிக்க டொலர் - | 313/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 222/= |
| கனடா டொலர் - | 245/= |
| சீன யுவான் - | 48/= |
| யுரோ - | 359/= |
| ஜப்பான் யென் - | 2.5/= |
| சிங்கப்பூர் டொலர் | 248/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 410/= |
| சுவிஸ் பிராங் - | 365/= |
| அமெரிக்க டொலர் - | 330/= |

# “லண்டன் தமிழர் சந்தை” பிரமாண்டமாக ஆரம்பம்




“இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்தும் சில தமிழ் வர்த்தக நிறுவனங்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்கின்றன. அதேவேளை யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனத்தின் ஊடாகவும் தாயகத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் தமது பொருட்கள் சேவைகளை காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.”

2023 ஆம் ஆண்டுக்கான ‘லண்டன் தமிழர் சந்தை’ நிகழ்வு நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. ஏப்பிரல் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் Byron Hall, Harrow Leisure Centre இல் இந்த நிகழ்வை மிகவும் பிரமாண்டமான அளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைப் பிரித்தானிய வர்த்தக சம்மேளனம் செய்திருந்தது.

சுமார் 150க்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தமது பொருட்களையும் சேவைகளையும் காட்சிப்படுத்துகின்றன.

இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இருந்தும் சில தமிழ் வர்த்தக நிறுவனங்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வதாகவும் அதேவேளை யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனத்தின் ஊடாகவும் தாயகத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் தமது பொருட்கள் சேவைகளைக் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரித்தானிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் ராஜ்குமார் தமிழர் பொருண்மியத்துக்கு தெரிவித்தார்.

இம்முறை நிகழ்வில் பிரித்தானிய தமிழ் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பல ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் ராஜ்குமார் தெரிவித்தார்.

வழமைபோல, விலை கழிவுடன் கூடிய விற்பனைகளும் இந்த நிகழ்வில் இடம் பெறுகின்றன. கண்காட்சி நடைபெறும் அதேநேரம், ஆடல், பாடல், வேடிக்கை நிகழ்வுகள், நாடகங்கள், வினோத நிகழ்வுகள், ஆடை-அலங்காரக் காட்சிகள் என்று பல்வேறுவிதமான பொழுதுபோக்கு நிகழ்வுகளும் இந்த நிகழ்வில் நடைபெற இருக்கின்றன.

இந்தக் கண்காட்சி தொடர்பான தகவல்களை https://www.tamilchamberofcommerce.org.uk/london-tamil-market-2023 என்ற இணையத் தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

2015 ஆம் ஆண்டு முதல் இந்தக் கண்காட்சியை பிரித்தானிய வர்த்தக சம்மேளனம் நடத்திவருகின்றது. ஆனால், கொரோ




னாத் தாக்கம் காரணமாக கடந்த மூன்று ஆண்டுகள் இந்த கண்காட்சி நடைபெறவில்லை.

பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 10,000 க்கும் அதிகமான மக்கள் ஒவ்வொருமுறையும் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டுவருகின்றனர். மூன்று ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் நடைபெறும் இவ்வாண்டு கண்காட்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வரி விளம்பரம்




## classified advertisement

### வேலைவாய்ப்பு

தமிழ் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டு தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாக தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகை பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு

- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்கு தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிக தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக் கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபார திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களை பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------




### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய் கிணறு அமைத்து தரப்படும்
0775652282

-------------------------------------

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள மருதனார்மடம், இணுவில், சுதுமலை, உரும்பிராய், உடுவில், கோண்டாவில் ஆகிய ஏதேனும் இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 071-0368973/ 075-4974782

-------------------------------------

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாட துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. -
0772469113




# தரமான உற்பத்திகளை தருவதற்காக உத்வேகத்துடன் செயற்படுகிறேன்

சித்த மருத்துவ துறையில் நீண்ட காலமாக பயணிக்கும் உம்மு கதீஜாவை தமிழர் பொருண்மியம் வார இதழ் நேர்கண்ட போது -

**கேள்வி -** எமது பாரம்பரியங்களை பாதுகாக்கும் ஒரு அருமையான விடயத்தை கையில் எடுத்திருக்கிறீர்கள். இந்த தொழிலை தொடங்குவதற்கு உங்களுக்கு உந்து சக்தியாக அமைந்த காரணிகள் என்ன?

**பதில்-** எமது நாட்டில் எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற எத்தனையோ வளங்கள் எமது கைகளுக்குள்ளே இருக்கிறன. அத்தோடு நான் சித்த வைத்திய பரம்பரையின் ஆறு தலைமுறைகளை தாண்டியவள் என்பதனால் இதன் மீதான ஈடுபாடு எனக்கு மிகவும் அதிகமாகவே இருந்தது. ஒரு தொழிலை செய்ய வேண்டும் என்ற நான் விரும்பிய போது எனது குடும்ப பாரம்பரியத்தில் இருந்து மாறுபடாமல் இந்த தொழிலை நான் ஆரம்பிப்பதற்கு விரும்பினேன்.

**கேள்வி -** நீங்கள் எப்போது இந்த தொழிலை ஆரம்பித்தீர்கள்?

**பதில் -** 2006ம் ஆண்டிலிருந்து நான் இந்த தொழிலை ஆரம்பித்தாலும் 2018 ஆம் ஆண்டு தான் மருந்துகளை உற்பத்தி செய்யும் நிலைக்கு மாறினேன். இது மிகவும் கடினமான பயணம் தான் ஆனால் எனக்கு பிடித்த விடயமும் கூட.

**கேள்வி -** உங்களது உற்பத்திக்கான தொழில்நுட்ப அறிவினை நீங்கள் எவ்வாறு






சித்த மருத்துவர் உம்மு கதீஜா

பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில் -** எனது மூதாதையரிடமிருந்து பெற்றுக் கொண்ட அறிவோடு இந்தியாவிலும் எனது உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பங்களை கற்றுக் கொண்டேன்.

**கேள்வி -** உங்களது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**பதில் -** எமது உற்பத்திகள் எப்போதும் மிகத் தரமானதாக இருக்கும். என்றாலும் பெரிய நிறுவனங்களோடு போட்டி போட்டு அதிக உற்பத்திகளை கொடுக்க கூடிய அளவிற்கு இன்னும் எங்களால் வளர முடியவில்லை. அவர்களது விலைவாசியோடு போட்டி போடுவதற்கு நாங்கள் மிக



**நேர்கண்டவர் - ஞா.கவினி**

வும் பிரயத்தனபடுகின்றோம்.

**கேள்வி -** சந்தையில் உங்களுடைய உற்பத்தி களுக்கான கேள்வி இருக்கிறதா?

**பதில் -** ஆம் எங்களது உற்பத்திகளை பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் மீண்டும் எங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள். இன்னும் தரமான உற்பத்திகளை கொடுக்க வேண்டும் என்ற உத்வேகம் நமக்கு ஏற்படுகின்றது.

**கேள்வி -** உங்களைப் போல தொழில் முனைவோராக இருக்கும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில் -** பெண் என்பவள் குடும்பத்தையும் சமூகத்தையும் பராமரிப்பதோடு மட்டுமல்லாமல் சுயமாக சிந்திக்கவும் தடைபட வேண்டும். நல்லவற்றை யோசித்து நல்வழியில் நடப்பவர்களுக்கு எப்போதும் அல்லாஹ்வின் அருள் இருக்கும்.

> “எமது நாட்டில் எமது முன்னோர்கள் விட்டுச் சென்ற எத்தனையோ வளங்கள் எமது கைகளுக்குள்ளே இருக்கிறன. அத்தோடு நான் சித்த வைத்திய பரம்பரையின் ஆறு தலைமுறைகளை தாண்டியவள் என்பதனால் இதன் மீதான ஈடுபாடு எனக்கு மிகவும் அதிக மாகவே இருந்தது”








# காசு கொடுக்கல் வாங்கல்களுக்கு கட்டுப்பாடு



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி அபிவிருத்தியினை நோக்கிய பயணத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் பல புதிய கொள்கைகள் முன் வைக்கப்பட்டு வருவதனை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் "காசாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களினை கட்டுப்படுத்துவதற்காக" புதிய நடைமுறை உருவாக்கப் பட்டுள்ளது.

அந்த வகையில்,

ஆளொருவர் 2023, ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், கூட்டு மொத்தத்தில் ரூபா.500,000 தொகையினதான அல்லது அதற்கு மேற்பட்ட பணத் தொகையொன்றை, ஒரு நாளில், அல்லது "தனியொரு கொடுக்கல் வாங்கல்" தொடர்பில் அல்லது ஒரு நிகழ்ச்சி தொடர்பான தொடர்ச்சியான தனியொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஒரு வங்கிக் கணக்கினூடாகப் பணம் பெறுனரின் கணக்குக் கான காசோலையொன்று அல்லது பணம்பெறுநரின் கணக்குக்கான வங்கி வரைவொன்று அல்லது கடன் அட்டை, பற்று அட்டை அல்லது இலத்திரனியற் கொடுப்பனவு முறை என்ற வகையில் அல்லாத வேறு வகையில் அல்லது வேறு முறைமையின் பாவனையின் மூலம் இன்னோராளுக்குச் செலுத்துமிடத்து புதிய கட்டுப்பாடு வருகின்றது. "தனியொரு கொடுக்கல் வாங்கல்" என்பது, தனியொரு விலைப்பட்டியலின்மீது, பெறுகையின்மீது அல்லது கூற்றின்மீது, எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு அல்லது பெருகை என்று பொருளாகும்."

இந்தக் கட்டுப்பாடு இரண்டு வகையில் அமைகின்றன. அவையாவன,

வரி வருமானத்தினைக் கணக்கிடுவதில் அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பிலான ஏதேனும் கழிப்பனவு அனுமதிக்கப் படமாட்டாது. **(Revenue nature expenditure)**




சொத்தொன்றினை கொள்வனவு செய்யும் பொழுது மேற்கூறிய முறைமை தவிர்ந்த வேறுவகையில் செய்யும் இடத்து அந்தத் தொகையானது சொத்தொன்றின் ஆகுசெலவாக கருதப்படமாட்டாது. **(Capital nature expenditure)**

இந்தப் புதிய நடைமுறையின் உண்மையான நோக்கத்தினை நாம் அவதானிக்கும்பொழுது இலங்கையில் காணப் படுகின்ற "கறுப்பு சந்தை" முறைமையை படிப்படியாக கட்டுப்படுத்தி அவற்றினை இயலுமானவரையில் இல்லாதொழிப்பதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

எனவே இனிவரும் காலத்தில் கொடுக்கல் வாங்கல்களினை செய்யும் பொழுது மிகவும் அவதானமாக இருப்பதுடன் அதற்குரிய பற்றுச்சீட்டினை உரிய முறையில் பேணிவருவதுடன் முறையாக கணக்கினை தயார்ப்படுத்தி, பட்டயக்கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்டு, அவற்றினை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு **(Inland Revenue Department)** உரிய ஆவணங்களுடன் உரிய காலத்திற்குள் சமர்ப்பித்து அவற்றிற்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தினையும் செலுத்துதல் அவசியமாகும். குறிப்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாளாந்த வியாபார கொடுக்கல் வாங்கல்கள்.

வியாபாரத்திற்கு தேவையான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் கொள்வனவு, திருத்துதல் மற்றும் பழுது பார்த்தல் போன்ற மூலதன செலவுகள்.

தனிப்பட்ட தேவைக்காக அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் கொள்வனவு செய்யும்பொழுது. (உதாரணம்- வாகனம், நகைகள்)

திருமணவிழா மற்றும் ஏனைய விழாக்கல்களுக்கான செலவுகள்.

அரங்கேற்ற செலவுகள் குறிப்பாக நடன அரங்கேற்ற செலவுகள்.

மருத்துவச் செலவுகள், பிரயாணச் செலவுகள் மற்றும் கல்வி செலவுகள்.

நாட்டில் நடைபெறுகின்ற முழுமையான கொடுக்கல் வாங்கல்களினை இனம் காணுவதன்வாயிலாக மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டு வருமானம்மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றின் உண்மையான புள்ளி விவரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் வாயிலாக அரசாங்கத்தினால் தற்பொழுது அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரிக்கொள்கைகளின் வாயிலாக சிறந்த வரி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையை ஏற்படும்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தினால்

உண்மையான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தரவுகளை பெற்றுக் கொள்ள முடியாததன் காரணத்தினால், அரசாங்கத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பல வகையான வருமானங்கள் (குறிப்பாக நேரடி மற்றும் மறைமுக வரி வாயிலாக பெறவேண்டிய பெருந்தொகையான வருமானத்தினை) பெற்றுக்கொள்ள முடியாமையினைக் காணக்கூடியதாக இருந்தது. முக்கியமாக இன்றுவரை அரசாங்கத்திற்கு வரி செலுத்தாது தப்பிக்கொண்டிருக்கும் வரி ஏய்ப்பவர்கள் (Tax Evaders) இனி வருங்காலத்தில் மிகவும் இலகுவாக இனங்காணக்கூடிய முறைமையேற்பட்டு புதிய வரி செலுத்துனர்கள் உள்வாங்கப்பட உள்ளார்கள். மேலும் சொத்திற்கான உண்மையான பெறுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை ஏற்படப்போகின்ற காரணத்தினால், அரசாங்கத்தினால் வருங்காலத்தில் அமுல்படுத்தவுள்ள "சொத்து வரி" (Wealth Tax) வாயிலாக மேலதிக வருமானத்தினையும் மற்றும் சிறந்த பெறுபேறுகளினையும் ஈட்டிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். எனவே இனிவரும் காலத்திற்கு அரசாங்கத்தினால் மிகவும் இலகுவான முறையில் தரவுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதன் வாயிலாக சிறந்த வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடிய பொறிமுறை உருவாக உள்ளது. அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட கடுமையான பல இலக்குகளினை அடையக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படப் போகின்றன.

ஏற்கனவே பாரிய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு வாயிலாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள், அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட இந்தப் புதிய நடைமுறையின் மூலம் மேலும் பல வகையில் அவதானமாக இருக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லையானால் மேலும் சிரமப்படவேண்டிய நிலையேற்படும். அதாவது பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்திற்குள் உள்வாங்கப்படுவதனால் உண்மையான வருமான தரவுகளை சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்படப்போகின்றது. அதன் வாயிலாக உண்மையான வருமானத்தினை சமர்ப்பிக்காதவர்கள் மேலதிகமாக வரியினை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். அது மாத்திரமன்றி கடந்த காலங்களில் அவ்வாறு முறையான வருமானம் மற்றும் சொத்து நிலவரத்தை சமர்ப்பிக்கத் தவறியமைக்கான தண்டப்பணம் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படப் போகின்றது.

என்னதான் புதிய புதிய சட்டங்கள் காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டாலும், அந்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை

> **“என்னதான் புதிய புதிய சட்டங்கள் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்பட்டாலும், அந்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி அவற்றில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு சிறந்த மாற்றுச் சட்டங்களை உருவாக்குவதன் வாயிலாகவே அரசாங்கம் நிர்ணயித்த இலக்கினை அடையக் கூடியதாக இருக்கும்”**

இனங்கண்டு சிறந்த மாற்றுச் சட்டங்களை உருவாக்குவதன் வாயிலாகவே அரசாங்கம் நிர்ணயித்த இலக்கினை அடையக் கூடியதாக இருக்கும். எனவே அரசாங்கம் இந்த புதிய நடைமுறைமையினை தொடர்ச்சியாக அதாவது நிலைத்தன்மையுடன் (Constancy) அமுல்படுத்துவது மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது. கடந்த காலத்தை அவதானிக்குமிடத்து அரசியல் நோக்கங்களுக்காக பல வரி நிவாரணங்கள் வழங்கப்படுவதன் வாயிலாக மக்கள் மத்தியில் இவ்வாறான புதிய கொள்கைகளை மக்கள் மதிக்கப்படாத நிலையில் காணப்பட்டு வருவது ஒரு கசப்பான உண்மையாகும்.

ஆனாலும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். ஏனென்றால் கீழ்க்கண்டவாறு இந்த புதிய முறைமையை அரசாங்கத்தினால் கடுமையாக மாற்றி அமைக்க முடியும்.

500,000 ரூபா தொகையினதான அல்லது அதற்கு மேற்பட்ட பணத்தொகையினை குறைக்கக்கூடிய சாத்தியகூறு (உதாரணமாக: 50,000 ரூபாவாக குறைக்கலாம்)

முழுமையாக மாற்றி அமைத்து கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் பணமாக செலுத்த முடியாது என்ற கட்டுப்பாடு கொண்டுவரப்படலாம்.



சட்டத்தை மீறுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை மற்றும் தண்டப்பணம் அறவிடப்படுதல் போன்றன.

வரி ஆலோசகர் என்ற ரீதியில் இதனை நோக்குமிடத்து, இந்த புதிய முறைமை இலங்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் பொதுமக்களுக்கு கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடு அரச செலவினங்களுக்கும் சில நிறுவனங்களுக்கும் இல்லாமல் காணப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதென நான் கருதுகிறேன். இவ்வாறான சட்டத்தில் காணப்படுகின்ற ஓட்டைகளின் வாயிலாக அந்த சட்டத்தினால் மற்றும் நடைமுறையின்மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த பெறுபேறுகளினை பெற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் மக்கள் மத்தியில் தாங்கள் மாத்திரம் சட்டத்தை ஏன் பின்பற்ற வேண்டும் என்ற கேள்வியும் எழுகின்றது.

அதற்கான காரணம் என்னவென்றால், மேற்கூறிய புதிய முறைமையின் கீழே உள்ள வற்றிற்கு விதிவிலக்களிக்கப்பட்டு ஏற்புடையதில்லையென அமுலாக்கப்பட்டுள்ளது. அவையானவன,

இலங்கை அரசாங்கத்தினாலான அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினாலான ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு,

ஒரு வங்கியினாலான அல்லது நிதி நிறுவனத்தினாலான ஏதேனும் கொடுப்பனவுகளுக்கு,

அமைச்சரினால் விதிந்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வகுப்பினரான ஆட்களுக்கு அல்லது கொடுப்பனவுகளுக்கு,

இலங்கையின் பாரிய பொருளாதார சீரழிவிற்கு காரணமாக இனம் காணப்பட்டவை லஞ்சம், ஊழல் மற்றும் அதனுடன் தொடர்புடைய முறைகேடான செயற்பாடுகளே ஆகும். அத்துடன் அரசாங்கத்தினால் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட பாரிய தேவையற்ற ஆடம்பர செலவினங்களும், திறனற்ற அபிவிருத்திச் செயல்திட்டங்களும் மிக முக்கியமாக இனம்காணப்பட்டுள்ளன. இந்த நிலையில் மேற்கூறிய விதிவிலக்குகளின் காரணமாக மேலும் பாரிய முறைகேடுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

எனவே ஒரு புதிய சட்டத்தினை உருவாக்கும் பொழுது இவ்வாறான குறைபாடுகளை நீக்கி, சிறந்த கட்டுக்கோப்பான முறைமையினை உள்வாங்குவதன் வாயிலாக நாடும், நாட்டு மக்களும் சிறந்த பெறுபேறுகளினை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் வருங்காலத்தில் ஏற்படும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.




- தமிழ்க்கவி -

# நன்னீர் மீன்



"நீ இருக்கிறது அந்தவானக் கொப்பில, நான் இருக்கிறது சங்கு சக்கரக்கடலில அந்திக்கு வாரும் மச்சான் சந்திச்சுக் கொள்ளுவம்." இது ஒரு விடுகதை. அவா் கள் யாா்? இவா்கள் எப்படி ஓரிடத்தில் சந் திக்கத்தான் போகிறாா்கள்? விடை, அவா் கள் புளியும் மீனும்.

எமது குளக்கட்டுகள் எல்லாவற்றிலும் நிழல் மரங்கள் அமைந்திருக்கும். கூழா, இலுப்பை, புளியமரம் சாளம்பை என நல்ல நிழல் கொடுக்கும் மரங்கள். குளக் கட்டிலும், குளக்கட்டின் பின்புறத்தே மருத மரங்களும்நிறைந்திருக்கின்றன. வான்கட் டின் ஓரமாக இத்திமரம் இருக்கும் ஆல மரத்தை குளக்கட்டில் அனுமதிப்பதில்லை. அது பெரும் விருட்சமாகி அணையை சேதப்படுத்திவிடும்.

"கூழாவடியாம் குளிர்ந்த நிழலாம்
குளக்கட்டு நீளம் புளியமிணலாம்
யாரடா எந்தன் குளக்கட்டுத்தன்னிலே"

நாங்கள்தான் அந்த சிந்து கவி பாடியோா்,... என வரும் பரமசிவன் சிந்து.

இப்படிக் குளங்களை அமைத்து அதற் கான பாதுகாப்புகளையும் செய்து விவசாயத் துக்காக வழங்கினாா்கள் பழங்கால மன் னா்கள். விவசாயிகளுக்கு மட்டுமாக அமைந்த இந்தக் குளத்தில் பல விதமான பறவைகளும் விலங்குகளும் மட்டுமல் லாது கணக்கற்ற நீா்த்தாவரங்களும் நிறைந்திருக்கும். இந்தக் குளத்தின் மீன் கள் அந்தப்பகுதி மக்களின் பாரம்பரியமான சொத்து. குளங்களில் வாழும் மீன்கள் எக்காலத்திலும் குறைந்து போவதில்லை. குளங்களில் வாழும் மீனினங்கள் சிறியது முதல் பெரியது வரை தனித்தனி சுவை யுள்ளன. சமையலிலும் தனித்தனி வகை களில் சமைத்து உண்ணப்படுகின்றன. முற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் குளத்து மீனை தரக்குறைவாக பாா்த்தனா். ஆனால் இப்போது இது நன்னீா் மீன்கள் என எல்லோராலும் வரவேற் கப்படுகின்றன.

ஆனாலும் எமது குளங்களில் பாரம் பரியமாக வாழ்ந்து எங்களையும் வாழ வைத்த அந்த மீனினங்களை நாம் ஒரு தடவை எண்ணியாவது பாா்க்கலாமே. ஏனெனில் அவைகளில் பல இப்போது காணப்படுவதில்லை.

“ குளங்களில் வாழும் மீனினங்கள் சிறியது முதல் பெரியது வரை தனித்தனி சுவையுள்ளன. சமையலிலும் தனித்தனி வகைகளில் சமைத்து உண்ணப்படு கின்றன. முற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் குளத்து மீனை தரக்குறைவாக பாா்த்தனா். ஆனால் இப்போது இது நன்னீா் மீன்கள் என எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. ”

மீன்களுக்கெல்லாம் அரசனாக கொள்ளப் படுவது விரால், கரும் பச்சை உடலில் வயிற்றில் அழகிய வெள்ளைக்கரை கொண்டது. ஒன்றரை இரண்டு அடிவரை நீளமானது. உருளையான தோற்றம் வழுக்கிச்செல்லும் இயல்பு. இதன் குழம்பு எந்தப்புளி விட்டுச்சமைத்தாலும் அவ்வளவு சுவையானது. (கிராமங்களில் குளத்து மீனுக்கு எலுமிச்சம் பழந்தான் விடுவாா்கள்.

காரணம் மீன் முள் எங்காவது சிக்கினாலும் எலுமிச்சம் புளி அதை கரைத்து விடுமாம்) இந்த விராலில் 'இருவிரால்' என ஒருவகை மிகப் பெரிதாக இருக்கும். ஆனால் சுவை குறைவு. கணையன், பொட்டியன், பனையேறி மூன்றும் முள் அதிகமானது, சுவை மிகுதியானது. மீன் முறி இல்லாமலே குழம்புடன் சாப்பிடலாம் அவ்வளவு சுவையாக இருக்கும். அடுத்து மயறி, இதில் செதில்கள் இருக்காது. தோல்தான் அருமையான சுவை. அதே போல செதிலற்ற இன்னொரு சிறிய மீன் சுங்கான். இதன் முள் குத்தினால் காய்ச்சலே வரும். அவ்வளவு கடுப்பாக இருக்கும். தாங்கமுடியாத வலியில துடிக்க வைக்கும்.

இன்னுமொரு முள்உள்ள கன்னம் உடையது கெளிறு. இதிலும் இரண்டு வகை ஒன்று ஓலைவாலன் கெளிறு. இது அரையடி நீளமிருக்கும் சுவை பெரிதல்ல. மற்றது நரிக்கெளிறு. இது நாலு நாலரை அங்குல நீளமே இருக்கும். செதில்கள் இல்லை. சமையலில் அதை குழம்பாகவோ, தீயலாகவோ, பொரியலாகவோ எப்படி சமைத்தாலும் அதன் சுவைக்கு நிகர் அதுதான். அடுத்து மாங்கன் இது மிகச்சிறியமீன். செதிள் இருக்கும் அதை நீக்க சில தொழில் நுட்பங்களை எமது கிராமத்துப் பெண்கள் வைத்திருப்பார்கள். இது நெத்தலிக்கு நிகரானது. வற்றிய குளத்தில் மட்டும் கிடைக்கும் ஒரு மாங்கன் இனம். அதற்கு 'வெள்ளி மடந்தை' எனப்பெயர். பொத்தமிளகாயும் எலுமிச்சம்புளியும் விட்டு தேங்காய்ப்பால்



இல்லாமல் உப்புப் போட்டு தீயல் செய்து இறக்கினால் அதன் சுவையை உண்டவர் மறக்க மாட்டார். நெத்தலி போல முள்ளுடன் உண்பதால் கல்சியம் நிறைந்த மீன். அதிகமாக பொரியல், தீயல் செய்ய உகந்தது.

அடுத்து உழுவை. கொஞ்சம் வெள்ளை அல்லது மஞ்சள் நிறம். கொழுத்த அரையடிக்கும். கொஞ்சம் அதிகமாக நீளமும் தட்டை மண்டையும் கொண்டது. அதைக் கழித்து விடலாம். இதை உப்பிட்டு அவித்து மாவில் கலந்து உழுவைமீன் பிட்டு என செய்து சாப்பிட்டிருக்கிறேன். அவ்வளவு பெறுமதியானதல்ல. இன்னொரு மீன் "விராலில்லாத குளத்துக்கு குறவை அதிகாரம்" என்றொரு பழமொழி கேள்விப் பட்டிருப்பீர்களல்லவா? அந்த குறவைமீன்



அப்படியே விராலை ஒத்திருக்கும். ஆனால் ஆகக் கூடி ஒரு முக்காலடி வளரும். அசப்பில் வரால் குட்டியோ என நினைக்கத் தோன்றும். வாளை, கடலில் உள்ள வாளைமீன் மிக அகலம் குறைந்தது. குளத்து வாளை நிறைந்த கொழுப்பும் இரண்டு வயதுக் குழந்தையின் உயரம் பருமனுக்கு வளரவும் கூடியது. மீன் வெட்டினால் அதன் துண்டுகளிலிருந்து கைகளில் எண்ணெய் வழியும். முதலில் துப்பரவு செய்தபின் சட்டியிலிட்டு நீரூற்றாமல் அடுப்பில் வைத்தால், கொழுப்பு உருகி நெய்யாக சட்டி நிறையும். அதை சேகரித்து வைத்து பின்னர் சமையலுக்கு உபயோகிப்போம். அப்படி எண்ணை எடுத்து வெயிலில் வாட்டியபின்னரே கறிவைக்கலாம். அப்படி எண்ணை கடத்திய வாளைமீனின் கறி எப்படி இருக்கும் தெரியுமா? இப்போது நினைத்தாலும் வாயூறுகிறது. இதே வடிவத்தில் ஒரடிக்கும் குறைவான சிறிய ஒரு மீனினம் 'கொக்கச்சான்' அழகிய மீன் செதில்கள் கிடையாது. வெள்ளி போன்ற நிறம்.

மீன்களில் 'ஒட்டி' என்றொரு மீன் மிக அளகானது. தட்டையானது. எல்லாக் குளங்களிலும் இருப்பதில்லை. ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளில் எமது குளங்களுக்குள் யப்பான்காறன் கொண்டுவந்து போட்டது 'திலாப்பியா'. இதை நாங்கள் 'யப்பான்மீன்' என்றே அழைப்போம். இன்னுமொருவகை மீன்எமது குளங்களில் வளர விடப்பட்டுள்ளது. வெளவால் எனப்படும் ஒருவகை மீனும் இப்போது வருகிறது.

இந்த மீன்களின் பெருக்கம் மிக அதி



கம். அதுமட்டுமல்லாது எமது தேசிய வளங்களாக இருந்த மேற்குறித்த பலவகை மீன்கள் அழிந்து வருகின்றன. இப்போது விரால் மீன்கள் சந்தைக்கு வருவது அருகிப் போயுள்ளது. மாங்கன், கச்சல் போன்ற சிறு இன மீன்களைப் பிடிக்கவே முடிவதில்லை. அவை பெரிய வலை போடும் மீனவர்களிடம் சிக்குவதில்லை. இந்த புதிய வர்க்க மீனினங்கள் எமது குளங்களில் அபரிமிதமாக பெருகி மற்ற இன மீன்களின் குஞ்சுகளை உணவாக கொள்வதால் அவை அழிந்து போகின்றன.

மீதமுள்ள மீன்களையும் ஏல விற்பனை மூலம் பெரிய வியாபாரிகள் குளத்தோடு விலை பேசி வாங்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு மட்டும்தான் குளத்தில் வலை வீசும் உரிமை இருக்கிறது. அதே சமயம் கிராமவாசிகள் யாராயினும் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதை தடுப்பதில்லை. குளம் வற்றும் காலத்தில் கரப்புக் குத்தும் உரிமை அக்குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கேயானது. அதிலும் தற்கால இளைஞர்களுக்கு கரப்பு கட்டவோ அதைக் கொண்டு மீன் பிடிக்கவோ பழக்கமில்லை. அந்தக் காலத்து மீன்கள் அனைத்தும் உடனடி சமையல்போக மீதம்உள்ளவை அனைத்தும் கருவாடாக்கி பரணில் போட்டு வைப்பர். பெருமழைக்காலத்தில் அவை காய்கறிகளுடன் கலந்தோ அல்லது தனியாகவோ அனைத்துமே உணவில் சேர்ந்து விடும்.

இந்த ஞாபகத்தில் அண்மையில் கிளிநொச்சி சந்தையில் குளத்துமீன் கருவாடு வாங்கினேன். அந்தக்கருவாடு, மீனைச் சரியாக சுத்தம் பண்ணாமலும் சரியாக காயவிடாமலும் இருந்ததுடன் துர்நாற்றம் வீசியது. இப்படித்தான் எல்லா விடயங்களிலும் வியாபார நோக்கம் புகுந்து நமது மண்ணின் சகல உணவுப் பண்டங்களும் கெடுக்கப்படுகின்றன. எமது குளங்களில் நாமே மீனைப்பிடித்து அதை ஆளும் பேருமாக சுத்தம் செய்து முதலில் அனலில் வாட்டி அவிய வைத்து அதன்பின் வெய்யிலில் போட்டு காயவிட்டு சணல் பைகளில் கட்டி குசினியில் அடுப்புக்கு நேரே பரண்கட்டி அதிலே வைத்துப் பாதுகாத்த விரால்கருவாடும், காட்டிறைச்சி வற்றல்களும் விதை தானியங்களும் இப்போது கனவாகிப் போய்விட்டன.

வளங்களை நாமே தொலைத்து விட்டு இல்லை இல்லை என்கிறோம். எங்கள் மக்களுக்கு எங்கள் குளங்களில் உரிமை இல்லையென்றானது. குளத்து மீன்களும் ஏற்றுமதியாகிறன்றன.



# திறமை மட்டுமே உங்கள் வெற்றிக்கு உதவுமா?

> “பேரார்வம் என்பது மிகவும் பலம் பொருந்திய ஒன்று. பேரார்வமே சாதனைகளுக்கான முதல் படியாக இருக்கிறது. பேரார்வமே ஒருவருடைய மன உறுதியை அதிகரிக்கச் செய்கிறது. பேரார்வமே ஒருவர் செயல்படும் சக்தியைத் தருகிறது. பேரார்வமே ஒருவர் முதன்மை நிலையை அடைய அடித்தளமாக இருக்கிறது”

“நீங்கள் வெற்றி பெற்றீர்கள் எனில், அதற்குக் காரணம் உங்களுடைய திறமைதான் என்று அடித்துச் சொல்ல முட்டாள் கூட்டம் ஒன்று இந்த உலகில் இருக்கும்” என்று சொல்லியுள்ளார் பிரான்ஸ் நாட்டு கவிஞர் எடோயார்ட் பைலரோன். இது மிகச் சரியான உண்மை. ‘பெரிய அளவில் வெற்றி பெற்ற மனிதர்கள் எல்லாம் அந்த வெற்றியைப் பெற காரணம், தங்களின் திறமைதான் என்றே நம்புகிறார்கள். ஆனால், இது வெற்றி குறித்த மிக மிகத் தவறான கண்ணோட்டம்’ என்று அடித்துச் சொல்கிறது அமெரிக்காவைச் சேர்ந்த ஜான் சி. மேக்ஸ்வெல் எழுதிய ‘சக்சஸ் இஸ் எ சாய்ஸ்’ (Success is a Choice) என்கிற ஆங்கிலப் புத்தகம்.

“திறமை மட்டுமே வெற்றிக்கு முக்கியமான காரணி எனில், எப்படி நீங்களும் நானும் திறமை வாய்ந்த இன்னும் பலரும் வெற்றி பெறாமல் இருக்கிறோம்? ‘மனிதனின் செயல் திறனுக்கும் அவனுடைய அறிவு, புத்திசாலித்தனம், கற்பனைத் திறன், போன்றவற்றுக்கும் இடையே ஒரு இணையுறவு (Correlation) இருக்கிறது. இவை எல்லாம் அவசியமான ஒன்றுதான். இவற்றை ஒருங்கிணைத்து காரியத்தை நடத்தி வெற்றி பெறச் செய்வது செயல் திறனே’ என்று சொல்லியுள்ளார் நவீன மேலாண்மையியலின் தந்தை என அழைக்கப்படும் பீட்டர் ட்ரக்கர்.

வெற்றி பெற திறமை மட்டுமே போதுமெனில், இந்த உலகில் மிகப் பெரிய வெற்றி பெற்றவர்கள் அனைவரும், பெரிய அளவுக்கு திறமை படைத்தவர்களாக அல்லவா இருக்க வேண்டும், ஆனால், உலக நடைமுறையைப் பார்த்தால் அப்படி இல்லையே! பார்ச்சூன் 500 நிறுவனத்தின் சி.ஈ.ஓ-களில் பாதிக்கும் மேற்பட்டோர் கல்லூரியில் ‘சி’ கிரேட் அல்லது அதற்கும் சற்றும் குறைவான கிரேட் பெற்றவர்களாகவே இருக்கின்றனர். அமெரிக்க செனட்டர்களில் சுமார் 65மூ பேர் பள்ளிப்பருவத்தில் மிகக் குறைவான புள்ளிகள் வாங்கும் நபர்களாகவே இருந்துள்ளனர். அமெரிக்காவில் இருக்கும் மில்லியனர் தொழிலதிபர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கல்லூரிப் படிப்பை முடிக்காதவர்களே!

இதிலிருந்து என்ன தெரிகிறது? வெறும்

திறமை ஒன்றே வெற்றிக்கு போதுமான விஷயமாக இல்லை என்பதுதான். அப்படியானால் எது வெற்றியாளர்களை உருவாக்குகிறது, யார் வேண்டுமானாலும் வெற்றியாளராக முடியுமா, திறமைக்கு மரியாதை ஏதும் இல்லையா என்பது போன்ற கேள்விகள் உங்கள் மனதில் எழுகின்றன இல்லையா?" என்று கேட்கும் ஆசிரியர் வெற்றிக்கான சூட்சுமங்களை விளக்குகிறார்.

"நம் அனைவருமே திறமையானவர்கள்தான். ஒரு சிலரிடத்தில் பல்வேறு திறமைகள் ஒருங்கிணைந்து இருக்கின்றன் பலருக்கு ஒரு சில திறமைகளே இருக்கின்றன. ஆனால், உங்களுக்கென்று தனிப்பட்ட திறமை ஒன்று இருக்கிறது. அதுதான் உங்கள் பலம். உங்களிடத்தில் இயல்பாக இருக்கும் அந்தத் திறமையை வளர்த்தெடுங்கள். உங்களுக்குத் தேவை என்று நினைக்கும் திறமையை வலுக்கட்டாயமாக வளர்த்தெடுக்க முயலாதீர்கள்.

எவர் ஒருவர் அவருடைய திறமையை நம்பி அல்லது திறமையைக் கண்டறிந்து வளர்த்தெடுத்து உபயோகிக்கிறாரோ, அவரே வெற்றியாளர். அபரிமிதமான வெற்றியைப் பெற வேண்டுமெனில், நீங்கள் உங்களுடைய பலமான தனித்திறமையைக் கண்டறிந்து, அதை வளர்த்தெடுக்க முயல வேண்டுமே தவிர, உங்களுடைய பலகீனத்தை சரிசெய்ய முயலக் கூடாது. பலகீனத்தைப் பலமாக்குவதற்குப் பதிலாக, உங்கள் பலத்தை அதீத பலமாக்கினால் மட்டுமே வெற்றிக்கு வழி அமைத்து தரும்.

நீங்கள் உங்களுடைய திறமையை (பலத்தை) வளர்ப்பதில் கவனம் செலுத்தப்போகிறீர்களா அல்லது உங்களுடைய பலகீனங்களை சரிசெய்வதில் கவனம் செலுத்தப் போகிறீர்களா, எதில் உங்களுடைய சக்தியை செலவழிப்பது பயன்மிக்க தாக இருக்கும், இந்த இரண்டில் எது உங்கள் சாய்ஸ் என்பதில் தான் வெற்றிக்கான வழியே இருக்கிறது" என்கிறார் ஆசிரியர்.

"வெற்றி என்பது உங்களுடைய தேர்ந்தெடுத்தலுக்கு ஏற்றாற் போல் கிடைக்கும் ஒன்று. நீங்கள் சரியான விஷயங்களை மட்டுமே தேர்ந்தெடுப்பேன் என்பதில் முனைப்பாக இருந்தீர்கள் எனில், உங்களால் நிச்சயமாக வெற்றி பெறமுடியும். வெற்றிக்கான தேர்ந்தெடுத்தல் என்பதில் பின்வரும் 14 விஷயங்கள் மிகவும் முக்கியமானவையாக இருக்கின்றன. இந்த 14 விஷயங்களில் கவனம் செலுத்தினால் உங்களால் நிச்சயமாக வெற்றி பெற முடியும்.

1. வெற்றி பெற உதவும் விஷயங்களை மட்டுமே தேர்வு செய்து அதில் செயல்படுவது.

2. நம் மீது முழுமையான நம்பிக்கை வைப்பது. இது நம்மில் பெரும்பான்மையானவர்களால் செய்ய முடியாத ஒன்று, நம்பிக்கை வைக்க முடியாததுதான். நம்முடைய திறமையை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போவதற்கான முழு முதல் காரணமாக இருக்கிறது. சொல்லப்போனால், மனிதன் தோல்வி அடைவதற்கு முழுமுதல் காரணமே தன் மீது அவன் நம்பிக்கை கொள்ளாததுதான். நம்மீது நாம் வைக்கும் நம்பிக்கைதான் நம் எதிர்பார்ப்புகளை வளர்த்தெடுக்கிறது. எதிர்பார்ப்புகளே நம் நடவடிக்கைகள் எந்தளவுக்கு இருக்கின்றன என்பதற்கு அடித்தளம் அமைக்கின்றன. நம் நடவடிக்கைகளே நமக்கான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இதனாலேயே நம்பிக்கை வைப்பது மிகவும் அவசியமாகிறது.

3. நம் திறமையையொட்டிய மற்றும் நமக்குப் பிடித்த விஷயத்தைச் (Passion) செய்வதில் பேரார்வம் கொண்டு செயல்படுவது. எது மனிதர் களை உயர உயர கொண்டு செல்கிறது, எது மனிதர்களை அதிக அளவிலான ரிஸ்க்கு களை எடுக்க வைக்கிறது, செய்யும் காரியத்தில் எந்த மாதிரியான இடையூறுகள் வந்தாலுமே எது மனிதர்களை இடைவிடாது உழைத்து நினைத்ததை அடைய உதவி யாக இருக்கிறது என்பது போன்ற கேள்விகளுக்கு பேரார்வம் என்பதுதான் விடையாக இருக்கிறது.

பேரார்வம் என்பது மிகவும் பலம் பொருந்திய ஒன்று. பேரார்வமே சாதனைகளுக்கான முதல்படியாக இருக்கிறது. பேரார்வமே ஒருவருடைய மன உறுதியை அதிகரிக்கச் செய்கிறது. பேரார்வமே ஒருவர் செயல்படும் சக்தியைத் தருகிறது. பேரார்வமே ஒருவர் முதன்மை நிலையை அடைய அடித்தளமாக இருக்கிறது.

4. வெற்றிக்கான நடவடிக்கைகளை உத்வேகத்துடன் தொடங்குவது. பயணத்துக்கான முதல் படி, அதை உத்வேகத்துடன் தொடங்கு வதாகும். உத்வேகமே பயம் வரும் வழியின் கதவை மூடுவதாக இருக்கிறது. உத்வேகமே வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறக்கிறது. மனிதன் எதிர்கொள்ளும் கஷ்டங்களை உத்வேகமே இலகுவானதாக மாற்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே இருக்கிற வித்தியாசம் உத்வேகம் என்றே சொல்லலாம். செய்ய வேண்டிய விஷயங்களை யாரும் சொல்லாமலேயே செய்யும் நபரே உத்வேகம் கொண்ட நபராவார்.

5. நம் சக்தியை செலவழிப் பதில் கண்ணும் கருத்துமாக இருப்பது எப்படி என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

6. ஈடுபடும் காரியத்தின் தன்மை குறித்து முன்னேற்பாட்டுடன் அனைத்துக்கும் தயார் நிலையில் இருப்பது. வெற்றி பெறும் மனிதர்கள் எக்கச்சக்கமான முன்னெச்சரிக்கையுடன்கூடிய தயார் நிலையில் இருத்தலே பெரும் வெற்றிக்கு வழிவகை செய் கிறது என்பதை உணர்ந்தவர் களாக இருக்கின்றனர். ஏனென்றால், தயார் நிலையில் இருக்க முயலும்போது நம் முழுத் திறமையையும் உபயோகிக்க ஆரம்பிப்போம்.

7. பயிற்சி என்பதை முழுமனதுடன் தொடர்ந்து செய்வது. உங்களுடைய செயல்பாடுகள் அனைத்தும் நீங்கள் எந்தளவுக்குப் பயிற்சி எடுத்துக்கொண்டீர்களோ, அந்தளவுக்கே இருக்கும். பயிற்சியே முன்னேற்றத்துக்கு வழிவகை செய்யும். மேலும், பயிற்சியே புதிய பல கோணங் களை உருவாக்கித் தரும்.

8. சோதனைகள் வந்த போதும் தளராமல் தொடர்ந்து முன்னேற்றத் துக்காகப் பாடுபடுவது. நீங்கள் எந்தளவுக்கு திறமை வாய்ந்தவராக இருந் தாலுமே விடாமுயற்சி என்பது இல்லாவிட்டால் வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு குறைவு.

9. எப்போதும் தைரியத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பது. வெளிப்படுத்தப்படும் தைரிய மானது தொடர்ந்து சவால்களை சந்திப்பதாய் இருக்கவே செய்யும். தைரியம் என்பதை உங்களுள்ளே தேடுங்கள். வெளியே தேடாதீர்கள். சின்னச் சின்ன காரியங்களில் தைரியமாய் செயல்படுவதன் மூலம் பெரிய காரியங்களுக்குத் தேவையான தைரியத்தை கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக்கொள்ள முடியும்.

10. எதையும் விரும்பி கற்றுக்கொள்ளும் குணம் கொண்டிருப்பது. கற்றுக் கொள்வதில் உங்களுக்கு ஈடுபாடு இல்லை எனில், எவ்வளவு சுவாரஸ்யமான விஷயமாக இருந்தாலுமே அதைக் கற்றுக் கொள்வதில் முழுமை இருக்காது.

11. நல்ல குணங்களை வளர்த்தெடுப்பது.

12. சுற்றம் மற்றும் நட்புடன் சிறப்பாக இணைந்து செயல்படுவது.

13. பொறுப்பேற்று நடத்திச்செல்வதில் முனைப்புடன் இருப்பது.

14. குழுவாக செயல்படுவதில் ஆர்வத்துடன் இருப்பது என இந்த 14 விஷயங்களையும் நீங்கள் செய்ய ஆரம்பித்தால், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்.

ஆக மொத்தத்தில், நீங்கள் யார் உங்களுடைய தேர்ந்தெடுத்தல்கள் என்னென்ன ஸ்ரீ உங்களுடைய வெற்றி என்பதுதான் வெற்றிக் கான சூத்திரம். சரியான விஷயங்களைத் தேர்வு செய்து, நீங்கள் மிகவும் தீர்மானமாக இருந்து செயல் பட்டீர்கள் எனில், இயல்பாக உங்களுக்கு இருக்கும் திறமையை முழு அளவுக்கு பயன்படுத்தி அதன் மூலம் வெற்றியை உங்களால் பெற முடியும்" என்று கூறி முடிக்கிறார் ஆசிரியர்.

வெற்றி பெற விரும்பும் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம் இது.

சர்வதேசச் சந்தையில் தங்கம் - நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு விலையேற்றத்தைச் சந்தித்து விண்ணைத் தொட்டு நிற்கிறது. விலை அதிகரிக்கும் போதெல்லாம் தங்கம் சார்ந்த முதலீட்டின் மீதான நம்பிக்கையும் அதிகரிக்கிறது. சாதாரண மக்கள் தொடங்கி, உலக அளவில் உள்ள மத்திய வங்கிகள் வரை அனைத்துத் தரப்பினரையும் ஈர்க்கக்கூடிய, பாதுகாப்பான முதலீடாகத் தங்கத்தைக் கருதுவதால், அதன் மதிப்பு உயர்ந்துகொண்டே போகிறது.

சென்ற ஆண்டு ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுத்த சமயத்தில், ஒரு அவுன்ஸ் தங்கமானது சர்வதேச சந்தையில்



ஷியாம் சுந்தர்

# விண்ணை தொடும் விலையேற்றம்!
# தங்க முதலீட்டுக்கு தகுந்த நேரமா?

2,000 டொலர் என்கிற அளவில் வர்த்தகமானது. பிற்பாடு கொஞ்சம் குறைந்து, கடந்த வாரம் 1,965 டொலர் என்கிற அளவில் வர்த்தகமானது.

பொதுவாக, உலகப் பொருளாதாரம் தடுமாறும்போதும், ஒரு விதமான அச்சம் சந்தையில் நிலவும்போதும், முதலீட்டாளர்களின் பார்வையில் தங்கமானது பாதுகாப்பான முதலீடாகத் தெரிவதால், உடனடியாக விலை யேற்றம் காண்கிறது. அமெரிக்க வங்கிகளின் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட வாய்ப்பு இருப்பதன் காரணமாகவும், மேலும் பாதிப்புகள் வரும் என்கிற அச்சத்தின் காரணமாகவும், தங்கத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

2020-21ஆம் ஆண்டுக்குப் பிறகு, உலகப் பொருளாதாரத்தில் காணப்பட்ட சில முக்கியமான நடவடிக்கைகள் இப்போதைய சிக்கல்களுக்குக் காரணமாகச் சொல்லலாம். கொவிட் 19க்குப் பிறகு, அமெரிக்கா பெரிய அளவிலான பொருளாதார ஊக்குவிப்பை அறிவித்தது. சுமார் 900 பில்லியன் டொலர் அளவுக்குப் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தது. கோவிட் தொற்றுநோயால் சரிந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை கருதப்பட்டது. ஆனால், அமெரிக்கா எடுத்த இத்தகைய நடவடிக்கைகள் பணவீக்கத்தைத் தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்தது. பணப்புழக்கமும் அதிகரித்து, விநியோகச் சங்கிலியில் (Supply Chain) தடங்கல் ஏற்பட்டதால், பணவீக்கம் எல்லை மீறிச் சென்றது.

இதனால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக அமெரிக்கா 2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, வட்டி விகிதங்களை அதிகரிக்க ஆரம்பித்தது. இதன் நோக்கம், வட்டி அதிகரிக்கும்போது, நிதிச் சந்தையில் பணப் புழக்கம் குறையும் என்று எதிர்பார்த்ததுதான்.

> “சர்வதேச பொருளாதாரச் சிக்கல்கள் உடனடியாகத் தீர்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. ரஷ்யா – உக்ரைன் போர் இன்னும் முடிவுக்கு வராத நிலையில், ஐரோப்பிய பிராந்தியத்துக்குத் தேவையான பாவனைப் பொருள்களை எடுத்துச் செல்வதில் தடங்கல்கள் இருக்கவே செய்கின்றன. தங்கத்தின் விலையேற்றத்துக்கான சூழல்கள் இருப்பதால், நீண்ட கால முதலீட்டு நோக்கில் தங்கம் வாங்க இது தகுந்த நேரமாகவே கருதலாம்.”

ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக, பணவீக்கம் குறைந்த பாடில்லை. அதனால் அடுத் தடுத்த எஃப்.ஓ.எம்.சி (Federal Open Market Committee - FOMC) கூட்டங்களில் மேலும் வட்டி விகிதங்களை உயர்த்திக்கொண்டே சென்றது அமெரிக்க / பெடரல் அமைப்பு. இவ்வாறு வட்டியை உயர்த்துவதால், பொருளாதாரத்தில் பல்வேறு பின்விளைவுகள் ஏற்படும் என்பதை உணர்ந்ததாலும், வட்டி விகிதத்தை உயர்த்துவது தவிர வேறுவழி இல்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, அதன் மத்திய வங்கியான அமெரிக்க / பெடரல் பணவீக்கத்தை 2 சதவிகிதத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்கிற குறிக்கோளுடன் செயல்படுகிறது. ஆனால், இதை நடைமுறையில் எப்படி சாத்தியப்படுத்துவது என்று தெரியாமல் தடுமாறுகிறது. மார்ச் 21-22-ம் திகதிகளில் நடந்த எஃப்.ஓ.எம்.சி கூட்டத்தின் முடிவில், 0.25% அளவுக்கு வட்டி விகிதத்தை உயர்த்துவதாக அறிவித்தது. அதாவது, 4.75% - 5% வரை வட்டி விகிதம் இருக்கும் வகையில் வட்டி உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த வட்டி விகித உயர்வுகள் 2023 முழுக்கத் தொடருமா என்று பார்த்தால், அதிகபட்சமாக 5.6% வரை வட்டி விகிதம் உயர வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், பணவீக்கம் சற்றும் குறையாத நிலையில், வட்டி விகிதத்தை உயர்த்துவது தவிர, அமெரிக்க ஃபெடரலுக்கு வேறு வழியில்லை என்பதால், வட்டி விகித உயர்வு என்கிற இந்த அஸ்திரத்தைப் பயன்படுத்தியே தீரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

பொதுவாக, வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டால், தங்கம் விலை சரிய வேண்டும். ஆனால், வட்டி விகிதம் உயர்த்தப்பட்ட பின்னும் தங்கம் விலை அதிகரித்துக்கொண்டேபோவது ஏன்? என்கிற கேள்வி எழலாம். சென்ற வருடம் முழுவதும் தொடர்ச்சியாக வட்டி விகிதத்தை உயர்த்தியதன் விளைவாகத்தான், தற்போது வங்கிகள் முறிவடையும் நிலைக்கு வந்துள்ளன. இனிவரும் நாள்களில் இன்னும் என்னென்ன நடக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை சந்தை அனுமானித்ததன் விளைவாகத்தான், தங்கத்தின் விலை ஏற்றத்தின் போக்கில் நகர்கிறது.

2024 முழுவதும் வட்டி விகிதங்களை

அமெரிக்க ஃபெடரல் உயர்த்துமேயானால், வரும் காலங்களில் மேலும் பல வங்கிகள் முறிவடையும் நிலைக்குச் செல்லலாம் என்று சந்தை எதிர் பார்க்கிறது. இதனால், நிறுவனங்களின் செயல்பாடுகளில் தொய்வு ஏற்படலாம். நிறுவனங்களின் செயற்பாடு களில் தொய்வு ஏற்பட்டால், பங்குச் சந்தை கள் ஆட்டம் காணலாம். பங்குச் சந்தை முதலீடுகள் இடம்பெயரலாம். இவை எல் லாம் எதிர்பார்த்துதான், தங்கத்தின் விலை இப்போதே அதிகரித்து வர்த்தகமாகி றது.

அமெரிக்க வங்கிகள் மூடப்பட்ட செய்தி களுக்குப் பின் உடனடியாக, முதலீட் டாளர்களின் நிலைப்பாட்டில் மாற்றத்தைப் பார்க்க முடிகிறது. சர்வதேச அளவில் தங்கம் சார்ந்த முதலீடுகள், ஃப்யூச்சர் டிரேடிங் ஆப்ஷன்ஸ் மற்றும் ஈ..டி.எஃப் மீது அதிகமாக நடந்து வருகின்றன. அமெரிக்க வங்கிகள் முறிவடையும் செய் திக்குப் பிறகு, இந்த மூன்றிலுமே முதலீடு கள் அதிகரித்து உள்ளன.

சாதாரண காலங்களில், தங்கம் விலை ஏறும்போது, இலாபத்தை வெளியே எடுக்க விற்பதால், விலை மீண்டும் சரியும். அதா வது, மற்ற வணிகங்களில் ஏற்படக்கூடிய ‘மார்ஜின் கால்’-களுக்கு ஈடுகட்ட தங்கத்தை விற்கும் (ஆதாயப் பதிவு) நிலை வரும். ஆனால், சென்ற பத்து மாதங்களில் தங்க வர்த்தகங்களில் அதிக முதலீடு நடைபெறா மல் இருந்த காரணங்களால், வங்கிகளின் முறிவு செய்தி வெளியானவுடன், லாபத்துக் காக யாரும் தங்கத்தை விற்க வில்லை. இதனால், தங்கம் விலை இறங்கவில்லை. மாறாக, முதலீட்டு நோக்கில் தங்கத்தைப் பலரும் வாங்கி இருப்பதால், விலை அதிகரிக்கவே செய்தது. ஆகையால், இந்த முறை சர்வதேச விலை உடனடியாக இறங்க வாய்ப்பில்லை என்றே கருதப் படுகிறது.

கடந்த 2022-ம் ஆண்டு மார்ச்சில் 2000 டொலர்களாகவும், அதன்பிறகு அந்த ஆண்டின் பிற்பகுதியில் நவம்பர் மாதத்தில் 1600 டாலர்களாகவும் குறைந்து காணப்பட்டது. இந்தச் சரிவுக்குக் காரணம், அமெரிக்க ஃபெடரல் வட்டி விகிதங்களை உயர்த்தியதால் 3 பில்லியன் டொலர் முதலீடு கோல்ட் ஈ..டி.எஃப் இலிருந்து விலகியது முக்கியமான காரணமாக பார்க்கப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து மத்திய வங்கிகளின் முதலீட்டு ஆதரவு மற்றும் சிறு முதலீட் டாளர்களின் பங்களிப்பு போன்றவற்றின் காரணமாக 2023 முதல் மூன்று மாங்களில் தொடர்ச்சியாக ஏற்றம் கண்டுவருவதைப் பார்க்க முடிகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உலக அளவில் மத்திய வங்கிகள் தங்கத்தை அதிகமாக வாங்கி முதலீடு செய்து வருகின்றன. 2022 ஆம் ஆண்டில் மட்டும் மத்திய வங்கிகள் 1,146 மெட்ரிக் டன் முதலீடு செய்துள்ளன. 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முதலீட்டுடன் ஒப்பிடும்போது இது 18% அதிகம்.

அமெரிக்காவில் ரஷ்யா செய்திருந்த முதலீடுகளை முடக்கிய பிறகு டொலருக் குப் பதிலாக, தங்கம் போன்ற முதலீடு களைப் பெரும்பாலான நாடுகள் நாடத் தொடங்கின. 2022ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் 2021ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகை யில் 12 மடங்கு அதிகரித்து, சுமார் 417 மெட்ரிக் டன் என்கிற அளவில் மத்திய வங்கிகள் தங்கத்தில் முதலீடு செய்திருப்பது, உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலம் சரியாக இல்லை என்கிற அச்சத்தை உணர்த்துவதாகவே உள்ளது. 50 ஆண்டு களுக்குப் பிறகு மத்திய வங்கிகள் 2023 ஆம் ஆண்டில் தங்கத்தில் முதலீட்டைக் கணிசமாக அதிகரித்துள்ளன.

தற்போதைய பொருளாதாரச் சிக்கல்கள் உடனடியாகத் தீர்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கின்றன. ரஷ்யா - உக்ரைன் போர் இன்னும் முடிவுக்கு வராத நிலையில், ஐரோப்பிய பிராந்தி யத்துக்குத் தேவையான பாவனைப் பொருள்களை எடுத்துச் செல்வதில் இன் னமும் தடங்கல்கள் இருக்கவே செய்கின் றன. தங்கத்தின் விலையேற்றத்துக்கான சூழல்கள் இருப்பதால், நீண்ட கால முத லீட்டு நோக்கில் தங்கம் வாங்க இது தகுந்த நேரமாகவே கருதலாம்.





ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

# அதிக லாபம் தரும் வெண்டைக்காய் பயிர்ச்செய்கை!

> "பயிர் வகைகளில் வெண்டை இலகுவாகவும் சிரமம் இல்லாமலும் பயிர் செய்யலாம். நாங்கள் எதிர்பார்ப்பதை விட மிக விரைவில் அறுவடைக்கு தயாராகும். மழை காலங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாதங்களிலும் தொடர்ச்சியாக நடுகை செய்யலாம். வெண்டைக்காயை பொறுத்தவரை பத்துக்கு மேற்பட்ட ரகங்கள் உள்ளன."

நாங்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளில் மிகக் குறுகிய காலத்தில் ஏனைய பயிர்கள் போன்று அல்லாமல் அதிக விளைச்சலை தரக்கூடியது வெண்டைக் காய் என்றால் அது மிகையாகாது.

சிறந்த முறைகளை விவசாயிகள் முழுமையாகக் கடைப்பிடித்தால்,

45 நாளில் விளைச்சல் தரும்.

மிகக் குறுகிய காலத்தில் லாபத்தினையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பயிர் வகைகளில் வெண்டையை இலகுவாகவும் சிரமம் இல்லாமலும் பயிர் செய்யலாம். நாங்கள் எதிர்பார்ப்பதை விட மிக விரைவில் அறுவடைக்கு தயாராகும். மழை காலங்கள் தவிர்ந்த ஏனைய. அனைத்து மாதங்களிலும் தொடர்ச்சியாக நடுகை செய்யலாம். வெண்டைக்காயை பொறுத்தவரை பத்துக்கு மேற்பட்ட ரகங்கள் உள்ளன.

ஆகையால் பெரிய காய்களை உடைய ரகங்களை நாங்கள் தேர்ந்தெடுத்து நடுவே செய்யலாம். ஆனால் சிறிய காய்கள் தான் சற்று ருசி அதிகம்.



இது வெப்பம் விரும்பும் பயிர். ஆகையால் நீண்ட நேர வெப்ப நாள் இதற்குத் தேவை. பயிருக்கு உரிய நீர் தேவையினை உணர்ந்து நீர் பாய்ச்சினால் போதும் மாறாக தேவைக்கு அதிகமான நீர் நிலத்தில் தேங்கி நின்றால் வேர் அழுகல் போன்ற நோய்கள் வர வாய்ப்புள்ளது.

பனி மூட்டத்தால் இதன் வளர்ச்சி பாதிக்கப்படும்.

குளிர் காலத்திலும், குளிர் பிரதேசங்களிலும் வெண்டை நல்ல முறையில் வளராது. நிழல் அதிகம் உள்ள இடத்திலும் வளராது. இதற்கு சொட்டுநீர் பாசனம், தூவல் நீர்ப்பாசனம், இறவை பாசனம் போன்ற அனைத்து நீர் கட்டமைப்பையும் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

வெண்டைக்காயை மணல் தவிர்ந்த எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். நல்ல உரச்சத்துள்ள மண்ணில் குறிப்பாக செம்மண்ணில் மிகவும் நன்றாக வளரும். கார அமில நிலையை ஓரளவு தாங்கி வளரும். ஏக்கருக்கு 2.5 கிலோ விதைகள் வீதம் தேவைப்படும். 2 அல்லது 3 முறை நிலத்தை உழவேண்டும். கடைசி உழவுக்கு முன் 25 டன் தொழு உரம்

இட்டு உழவேண்டும்.

அதன் பின் விதைகளை 30 - 60 செ.மீ இடைவெளியில் 3 விதைகள் என்ற விகிதத்தில் நட வேண்டும். 10 நாள்களுக்கு பின் 2 செடிகளை விட்டு. மீதம் உள்ள ஒரு செடியை அகற்றிவிட வேண்டும். நட்டவுடன் நீர் பாய்ச்சவேண்டும்.

பின் தேவைக்கு ஏற்றாற் போல் ஒன்று விட்டு ஒரு நாள் நீர் வழங்க வேண்டும். இப்பயிருக்குச் செலவில்லாமல் இயற்கை





உரமான ஆட்டெரு அல்லது மாட்டெரு அல்லது கோழி எரு போன்றவற்றை மேல் உரமாகப் பயன்படுத்தலாம்.

விதைகள் நட்டு 30ஆம் நாள் களை யெடுக்க வேண்டும். வெண்டையைப் பொறுத்தவரை நோய்த் தாக்கம் குறைவு என்பதால் ஒரு சில பூச்சிகளை கட்டுப்படுத்த இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கிருமிநாசினி களை பயன்படுத்தலாம்.

உதாரணம், கற்பூர கரைசல் ,பஞ்சகாவியா, புகையிலை கரைசல் போன்ற இயற்கை கிருமிநாசினி களை பயன்படுத்தலாம். பூச்சிகளின் தாக்கம் சற்று அதிகமாக இருந்தால் அக்கினி அஸ்திரா போன்ற இயற்கை கிருமி நாசினிகளை பயன்படுத்தலாம்.

வெண்டையைப் பொறுத்தவரை எந்த ஒரு பண்ணையாளரும் ஏக்கர் கணக்கில் நடுகை செய்ய விரும்பு வதில்லை. காரணம் - நட்ட 45 நாள்களில் காய்கள் அறுவடைக்கு வந்துவிடும். காய்கள் முற்ற முன் அறுவடை செய்யவேண்டும். 2 நாள்களுக்கு ஒருமுறை கட்டாயம் அறுவடை செய்வது அவசியம் என்பதாலும். சாதாரணமாக ஓர் ஏக்கரில் உற்பத்தி செய்தாலே ஒன்று விட்டு ஒரு நாள் 500 கிலோவில் இருந்து ஆயிரம் கிலோ வரை அறுவடை செய்தாக வேண்டும்.

1 ஏக்கருக்கான மொத்த உற்பத்தி 10 டன் காய்கள் வரை கிடைக்கும் என்பதால். அதாவது குறுகிய காலத்தில் அதிகளவான விளைச்சல் கிடைத்துவிட்டது. அனைத் தையும் எவ்வாறு சந்தைப்படுத்துவது என்ற அந்த விவசாயியின் ஐயப்பாடு தான் இதற்குரிய முழுக் காரணமாகும்.



வெண்டைக்காய் பயிர் செய்யும் விவசா யிகள் ஒன்றை நினைவில் வைக்க வேண் டும். அதாவது - நீங்கள் ஓரிரு வியாபாரி களை மட்டும் நம்புவதால் தான் இவ்வறான பிரச்சினை வருகின்றது.

மாறாக வெண்டைக்காய் நடுகை செய்து பூக்க ஆரம்பிக் கும் தருணத்தில் 7, 8 வியா பாரிகளோடு நாங்கள் தொடர் பினை ஏற்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் நாங்கள் ஓர் ஏக்கர் மாத்தி ரமில்லாமல் இரண்டு அல்லது மூன்று ஏக்கரில் வெண்டை பயிர் செய்தாலும் தயக்கம் இல்லாமல் சுழற்சி முறையில் ஒன்று விட்டு ஒரு நாள் தொடர்ச்சியாக அறுவடை செய்து வியாபாரிகளுக்கு தொடர்ச்சியாக விற்பனை செய்து கொண்டிருக்கலாம்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784
WhatsApp:0769196445

# கோடை காலமும் கறவை மாடுகளும்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

> ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான மாதங்கள் பொதுவாக கோடை காலமாக கருதப்படுகின்றன. இந்தப் பருவத்தில் மழை குறைந்து வெப்பம் அதிகரிக்கிறது. இந்த நாட்களில் மனிதர்களை மட்டுமன்றி மாடுகள் போன்ற கால்நடைகளும் வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றன

கோடை காலத்தில் கறவை மாடுகள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றன. இந்த நாட்களில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக ஏற்படும் நீர் மற்றும் தீவனத்தின் பற்றாக்குறை கால்நடைகளின் வழமையான உடலியல் தொழிற்பாடுகளைக் கடுமையாக பாதிக்கின்றன. இவற்றின் காரணமாக பால் உற்பத்தி குறைதல், இனப்பெருக்க ஆற்றல் குறைதல், உடல் எடை குறைதல் போன்ற துர் விளைவுகள் ஏற்படுகின்றன. இதனால் இவற்றை நம்பி வாழும் பண்ணையாளர்கள் பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்திக்கின்றனர்.

கறவை மாடுகள் போன்ற கால்நடைகள் காலநிலைக்கு தம்மை இயல்பாகவே தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவை. அதிகரித்த வெப்பம் வெளி சூழலில் காணப்படும் போது தமது உடல் தொழிற்பாடுகளைக் குறைத்தும் உணவு உண்பதை குறைத்தும் தமது உடல் வெப்ப உற்பத்தியைக் குறைகின்றன. இதே போல் குளிர் நிறைந்த நாட்களில் அதிக தீவனம் உண்டு தமது உடல் வெப்பச் செயற்பாடுகளை அதிகரித்து வெப்பத்தை உற்பத்தி செய்கின்றன.

இலங்கை, தமிழகம் போன்ற வெப்ப மண்டல பகுதிகளில் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான மாதங்கள் பொதுவாக கோடை காலமாக கருதப்படுகின்றன. இந்த பருவத்தில் மழை குறைந்து வெப்பம் அதிகரிக்கிறது. இந்த நாட்களில் மனிதர்களை மட்டுமின்றி மாடுகள் போன்ற கால்நடைகளும் வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றன. இந்த கட்டுரை கறவை மாடுகளில் வெப்பக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவற்றுக்குரிய தீர்வு மேலாண்மை முறைகளையும் ஆராய்கிறது.

சூழல் வெப்பநிலை, சாரீரப்பதன், காற்றின் வேகம், காற்றமுத்தம் போன்ற சூழல் காரணிகள் கால்நடைகளில் வெப்ப அயர்ச்சியைக் கூட்டாக ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக அவை கடுமையாக பாதிக்கபடுகின்றன. கறவை மாடுகளின் சராசரி உடல் வெப்பநிலை 38.6 பாகை செல்சியஸ் [101.5 F ] ஆகும். இது மாற்றாமல் வைத்து பேணப்பட வேண்டும். சுற்றுச் சூழலில் வெப்பம் அதிகரிக்கும் போது அது உடலையும் பாதிக்கிறது. பொதுவாக சராசரி உடல் வெப்பநிலை வரை சூழல் வெப்பநிலை காணப்படும் வரை கால்நடைகள் தமது உடல் தொழிற்பாடுகளைச் சீராக வைத்திருக்கும். வெப்பமானது அதிகரித்த



இடத்தில இருந்து குறைந்த இடத்துக்கு கடத்தப்படுகிறது. அதாவது வெளி வெப்பம் அதிகமாயின் அதனை விடக் குறைந்த கால்நடைகளின் உடலுக்கு கடத்தப்படும். மேலும் உடல் தொழிற்பாடுகளால் கால்நடைகள் கணிசமான வெப்பத்தை உற்பத்தி செய்கின்றன. அவை உடலால் உற்பத்தி செய்யப்படும் வெப்பத்தைச் சுவாசம், வியர்வை மூலம் உடலை தளர்த்தி வெளியேற்றுகின்றன. உடலால் உற்பத்தி செய்யப்படும் வெப்பம் மற்றும் சூழல் வெப்பம்



என்பன ஒன்று சேர்ந்து ஒருமித்த அதிகரித்த வெப்பத்தை தோற்றுவிக்கின்றன.

கோடை காலத்தில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் சுற்றுப் புறத்தில் உள்ள நீர்நிலைகள் செடி கொடிகள் மரங்கள் ஏனைய உயிரினங்களில் இருந்து நீரை ஆவியாக்குகிறது. இதனால் அந்த பகுதியின் சாரீரப்பதன் அதிகரிக்கிறது. இதனால் வியர்வையை வெளியேற்றும் திறனும் குறைகிறது. உடல் வெப்பத்தை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட அது உடலை பாதிக்கிறது.

வறட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் கிடைப்பது குறைந்து விடுகிறது. மேச்சல் தரைகளில் புற்களின் அளவு குறைவதால் அவை அதிக தூரம் பயணிக்க வேண்டி ஏற்படுகிறது. இதனால் அதிக சக்தியும் தண்ணீர் செலவும் ஏற்பட்டு அவற்றின் உற்பத்தி திறன் வீழ்ச்சியடைகிறது.

மேலும் இக் காலப் பகுதியில் உடல் வெப்ப உற்பத்தியை குறைக்கும் விதமாக மாடுகள் தமது தீவன உட்கொள்ளுகையை குறைப்பதால் புரதம் போன்ற உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் குறைவடைகின்றன. இதனால் உடல் வளர்ச்சி பாதிப்படைவதோடு இனப்பெருக்க ஆற்றலும்




பாதிக்கபடுகிறது. குறிப்பாக ஈஸ்ட்ரோஜன் போன்ற இனப்பெருக்க ஒமோன்களின் சுரப்பு அதிகரித்த வெப்ப நிலையில் குறைகிறது. இதனால் வேட்கை / சினைப்பருவ அறிகுறிகளை காட்டுவது சரியாக தெரியாது. கருவுறும் பசுக்களுக்கு சில வேளைகளில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்பும் ஏற்படுகிறது. கருவின் வளர்ச்சியும் பாதிக்கப்படும். பொதுவாகவே கால்நடைகள் வெப்ப காலங்களில் சினையாகும் விகிதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

கோடை காலத்தில் ஏற்படும் உடல் வெப்பத்தை குறைக்க உட்புற உறுப்புக



ளுக்கு செல்லும் இரத்த ஓட்டம் தோல் போன்ற வெளிப்புற உறுப்புகளுக்கு செல்லும்படி திருப்பப்படுகிறது. இதனால் கருப்பை, சூலகம் கருப்பை குழல் போன்ற உறுப்புகளுக்கு சரியான இரத்த ஓட்டம் கிடைக்காது. இதனால் அவற்றுக்கு கிடைக்க வேண்டிய சத்துக்களும் குறைவதோடு வெளியேற வேண்டிய கழிவுகளும் தேங்கி விடுவதால் அவற்றின் வழமையான செயற்பாடுகள் பாதிக்கபட்டு இனப்பெருக்கம் பாதிக்கபடுகிறது. இதன் காரணமாகத்தான் ஒன்றுக்கு மேற்பட்ட சினை ஊசி போட்டும் சில வேளைகளில் பசுக்கள் சினைப்பிடிக்காத நிலை ஏற்படுகிறது. அத்துடன் சினை மாடுகளில் கன்றின் வளர்ச்சியும் பாதிக்கபடுகிறது.

கிடைக்கும் பசுந்தீவனங்களில் தகுந்த சத்துகள் குறைதல் போதிய நீர் கிடைக்காமையாலும் வளர்ச்சி பாதிப்படைவதாலும் பாலுற்பத்தி குறைவதோடு பாலின் கொழுப்பு மற்றும் கொழுப்பில்லா இதர சத்துகளும் குறைவடைகின்றன. அத்துடன் அசையூன் இரைப்பையில் காணப்படும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு அமில தன்மை அதிகரிப்பதால் கால் நடைகள் இறக்க நேரிடும்.

மேலும் நீர்நிலைகளில் மீன்கள் பாசிகள் மற்றும் அல்காக்கள் இறப்பதால் அவை மாசுபட்ட அவற்றை அருந்தும் பசுக்கள் நோய் வாய்ப்படுகின்றன. அத்துடன் கால் நடைகளின் நிர்ப்பீடன நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால் கால்வாய் நோய் கருங்காலி நோய் போன்றனவும் இலகுவாக ஏற்படுகின்றன. அத்துடன் புற மற்றும் அக ஒட்டுணிகள் இலகுவில் இவற்றை தாக்கி இவை பலவீனமடைகின்றன.

### வெப்ப அயர்ச்சி

அதிக சூடான சூழலுக்கு கால்நடைகள் உட்படுவதால் ஏற்படும் அசௌகரியமான நிலை வெப்ப அயர்ச்சி எனப்படும்.

### வெப்ப அயர்ச்சியின் அறிகுறிகள்

* மாடுகள் நிழலான பகுதியில் தஞ்சமடையும்.
* அதிக அளவில் தண்ணீர் குடிக்கும்
* அதிக உமிழ் நீர் வடிக்கும்
* வேகமான மூச்சு விடுதல் காணப்படும் அதே வேளை மூச்சு விட சிரமப்படும்.அதே வேளை வாயாலும் சுவாசிக்கும்.
* உடலின் வெப்பம் அதிகரித்துக் காணப்படும்.
* நடமாடும் திறன் குறையும்.
* கடும் வெப்ப அயர்ச்சியின் போது அவை நடுங்கி கீழே விழுது விடும்.
* பொதுவாக உள்ளூர் மாடுகளை விட வெளிநாட்டு ரகம் மற்றும் கலப்பின மாடுகளே வெப்ப அயர்ச்சிக்கு உட்படுகின்றன.
* வெப்ப அயர்ச்சியை குறைக்க சிறப்பான மேலாண்மை முறைகளை செய்ய வேண்டும்.

### கொட்டகை மேலாண்மை

வெக்கை காலத்தில் கால் நடைகளை பாதுகாக்க சிறந்த கொட்டகை மேலாண்மை அவசியம்.வெளி வெப்பநிலையை விட கொட்டகையினுள் வெப்பநிலை குறைவாக அமைய வேண்டும். கொட்டகை நல்ல காற்றோட்டம் மிக்கதாகவும் சூரிய ஒழி நேரடியாக விழாதவாறு அகல பக்கம் கிழக்கு மேற்கு நோக்கியதாக அமையவும் வேண்டும். கொட்டகையின் அகலம் அதிகமாக இருந்தால் காற்றோட்டம் தடைப்படும். அகலம் 25 - 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். நீளம் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாறுபடலாம் எனினும் அதிக பட்சம் 100 அடிக்கு மேல் இருப்பது கவனிப்பில் சிரமத்தை ஏற்படுத்தலாம். உயரத்தை 12 அடிக்கு மேல் வைத்திருப்பது பிரயோசனமற்றது. ஒரு மாட்டுக்கு 5 -60 சதுர அடி வரும் வகையில் பார்க்க வேண்டும். ஒரு கொட்டகைக்கும் மற்றைய கொட்டகைக்கும் இடையில் இடைவெளியை குறைந்து இருந்தால் காற்றோட்டம் சிறப்பாக இருக்கும்.

பனை,தென்னை ஓலை மற்றும் வைக்கோல் கொண்டு கூரையை வேய்வது சிறப்பானது.தகரம் மற்றும் அஸ்பெஸ்டோஸ் கொண்டு கூரையை வேயும் பொது அதற்கு மேல் ஓலைகள், வைகோலை போட வேண்டும். கீரைக் கொடி, பயறு கொடி ,அழகு மலர் கொடி போன்ற படர் தாவரங்களை வளர விடலாம். தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்தலாம். கொட்டகையை சுற்றி நிழல் மரங்களை நட வேண்டும். வெயில் நேரங்களில் ஈரச் சாக்குகளை சுவரின் இரு பக்கமும் தொங்க விடலாம். கொட்டகையின் உள்ளே தெளிப்பான்களையும் மின் விசிறிகளையும்



உபயோகிக்கலாம். நவீன பண்ணைகளில் நவீன நீர் தெளிப்பான்கள் பாவிக்கப்படுகின்றன.பகல் வேளையில் மர நிழல்களில் மாடுகளை கட்டி வைக்கலாம். இரவு வேளையில் வலு குறைந்த அதிகம் வெப்பத்தை வெளிவிடாத மின்குமிழ்களை பாவிக்கலாம்.

கொட்டகை இல்லாத மற்றும் மிக குறைந்த மாடுகளை கொண்டவர்களுக்கு மர நிழல்கள் மிகவும் பயன் மிக்கவை.



மேய்ச்சலுக்கு விடும் நேரத்தை காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையும் மாலை 4 தொடக்கம் 6 மணி வரையும் ஒழுங்கு படுத்தலாம். அதிக வெப்பமுள்ள மதிய வேளையில் மேய்ச்சலில் விடுவது சாதகமற்றது.

வெப்பம் அதிகமுள்ள நாட்களில் குறைந்தது இரண்டு முறையாவது மாடுகளை குளிப்பாட்ட வேண்டும். எருமை மாடுகளை குறைந்தது ஐந்து முறையாவது குளிப்பாட்ட வேண்டும். எருமை மாட்டுக்கு வியர்வைச் சுரப்பிகள் அதிகம் இல்லாததாலும் அவற்றின் நிறம் கருப்பு நிறமாகையாலும் வெப்பத்தால் கடுமையாக பாதிக்க படுகின்றன.

### தீவன மேலாண்மை

சூழலின் வெப்பநிலை கூடினால் மாடுகள்தீவனம்உட்கொள்வது குறைவடைகிறது. கோடையில் வறட்சி காணப்படுவதால் பசும் புல் கிடைப்பது சிரமமாகிறது.

# தேவையற்ற....

- வேதநாயகம் தபேந்திரன் -



நியூசிலாந்து நாட்டில் உள்ள ஒரு பாடசாலை. கற்றல் செயற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்போது ஓர் இடைவேளை நேரம். பாடசாலையின் வாசலில் ஒரு கார் வந்து நிற்கிறது. நாட்டின் கல்வி அமைச்சர் வந்து இறங்குகின்றார்.

தனியாளாக உள்ளே வந்து சிற்றுண்டிச்சாலையினுள் நுழைகின்றார். அவரை ஓர் ஆசிரியர் வரவேற்கின்றார்.

கல்வி அமைச்சரைத் தெரிந்த ஏனையோர் ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டுத் தமது பாட்டில் இருக்கின்றனர்.

அந்தப் பாடசாலை உள்ள பிரதேசத்தின் நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

அதற்கான வேலையொன்றுக்கு ஆளும் கட்சி சார்பான பணிக்குக் கல்வி அமைச்சர் வந்திருந்தார்.

இதே விடயத்தை எங்களது நாட்டுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரு கல்வி அமைச்சர் வருவதென்றால் எப்படி இருக்கும்.

அவரை வரவேற்பதற்கான தடல் புடல் ஏற்பாடுகள் காரணமாக எத்தனை பேரின் பெறுமதியான மணித்தியாலங்கள் விரயமாகும்.

மாணவர்களது கற்றல் நடவடிக்கைகள் எவ்விதம் தடைப்படும்.

வரவேற்புக்கென எத்தனை இலட்ச ரூபாக்கள் செலவழியும். செலவழித்த பணம் எதுவித உற்பத்தித் திறனையும் தராத வீண் விரயம் தான். ஆனால் அதைப் பற்றி யார் கவலைப்படுகின்றார்கள்.

வளர்ந்த நாடுகள் மேலும் மேலும் வளர்கின்றன. எம் போன்ற நாடுகள் அந்தளவு வேகத்திற்கு வளர முடிவதில்லை. உண்மையாகக் கூறப் போனால் கலர் கலரான நிலையில் நாடு பின்னோக்கியே பயணிக்கும்.

சர்வதேச விழிப்புணர்வுத் தினங்கள் எல்லாவற்றுக்கும் விழா எடுக்கின்றோம். ஒரு விழாவா எடுக்கின்றோம்?

தேசிய விழா, மாகாண விழா, மாவட்ட விழா, பிரதேச செயலகப் பிரிவு விழா,கிராம மட்ட விழா என விழாக்களின் நீளம் மிக நீளமானது.

அதற்காகச் செலவிடப்படும் பணம் பல கோடியைத் தாண்டும். இந்த விழாக்களில் பரவலாக உயர்மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் நுள்ளுப்பிறாண்டி, கிள்ளுப் பிறாண்டி வேலைகளும் நடக்கும்.

உற்பத்தித் திறனை மிகக் குறைந்தளவு தரும்,பலவேளைகளில் தராத விழாக்களினால் என்ன பயன்?

கொவிட்-19 பெருந்தொற்று நோய் நாடளாவிய பொருளாதார நெருக்கடியின் பின்னர் இந்த விழாக்கள் பெருமளவில் காணாமல் போய் விட்டன அல்லது மிகவும் குறைந்த செலவுடன் நடக்கின்றது.

நாட்டின் பொருண்மியத்தை உயர்த்தும் தேசிய வேலைத் திட்டத்தை நிதி தந்த சர்வதேச நாணய நிதியம் கூறுகின்றது.

அவர்கள் கூறினால் என்ன கூறாவிட்டால் என்ன நாம் இது போன்ற விழாக்களை நிறுத்தியோ அல்லது மிகக் குறைந்த செலவில் உற்பத்தித் திறன் தரக் கூடியதாக நடத்தியோ பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டும்.

---

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

புல் பயிர் செய்கையில் இருப்பவர்கள் போதிய நீர் இல்லாத படியால் புற்களில் உள்ள ஊட்ட சத்துகள் குன்றி நார்ச்சத்து அதிகரிக்கும். இதனால் உடல் எடை குறையும். அத்துடன் பால் உற்பத்தியும் குறையும் எனவே அதற்கு தகுந்தது போல பசுக்களுக்கு பசுந் தீவனம்,உலர் தீவனம் செறிவு தீவனம் வழங்கி கனியுப்பு இழப்பை ஈடு செய்ய வேண்டும்.

அதிக மாடுகள் காணப்படும் பண்ணைகளில் வயதான உற்பத்தி குறைந்த, சினைப்பட சிரமப்படும் மாடுகளை கழிக்க வேண்டும். இல்லாது போனால் அவை ஏனைய மாடுகளுடன் உணவு தண்ணீருக்கு போட்டி போட்டு அனைத்து விலங்குகளுக்கும் தகுந்த உணவு தண்ணீர் கிடைக்காது.

பண்ணையை சுற்றி மா, பலா, பூவரசு, அரசு, ஆலமரம், கிளுவை போன்ற மரங்களை நட்டு வைத்தால் புல் கிடைக்காத வறட்சி நாட்களில் இவற்றின் இலைகளை வழங்கலாம். இவற்றில் கணிசமான அளவு புரதச் சத்து காணப்படுகிறதுகோ

வைக்கோல், கடலை, உளுந்து கொடி கரும்பு தோகை, சக்கை போன்றன அதிகம் கிடைக்கும் காலப் பகுதிகளில் அவற்றை சேமித்து வைக்கும் போது அவற்றை வறட்சி காலத்தில் மாற்றுத் தீவனமாக பாவிக்கலாம்

சொட்டு நீரப்பாசனம் முலம் புள் வளர்ப்பில் ஈடுபட்டு நீர் விரயத்தை தவிர் கல்லாம்.உயரமான இடத்தில கொட்டகையை அமைத்தால் கொட்டகையை கழுவும் நீரை புல் வளரும் பகுதிக்கு வடிய விட்டால் நீர் விரயம் தவிர்க்கபடும்.

புற்களை வழங்கும் போது புல் வெட்டும் இயந்திரம் மூலம் சிறிய துண்டுகளாக வெட்டி கொடுப்பதால் விரயமாதல் கணிசமாக குறைக்கப்படுகிறது.

அசோலா மற்றும் ஹைட்ரோபோனிக்ஸ் [hydroponics] எனும் மண்ணில்லா பயிர் செய்கையை செய்து மாடுகளுக்கு வழங்க முடியும். அத்துடன் புற்கள் அதிகமாக கிடைக்கும் காலத்தில் அதனை உலர்த்தி உலர் புல்லாகவும் [hay] பதப்படுத்தி ஊறுகாய் புல்லாகவும் [silage] வறட்சி காலத்தில் கொடுக்க முடியும்.

அதிகமாக தீவன மூலப் பொருட்கள் கிடைக்கும்போது அவற்றை பாதுகாக்கும் அதே வேளை உணவு நஞ்சாகாமலும் பாதுகாக்கவும் வேண்டும்.

கோடையில் மாடுகள் வெப்ப உற்பத்தியை குறைக்கும் விதமாக அடர்வு தீவனத்தை குறைத்தே உண்கின்றன. எனவே உட்கொள்ளும் அடர்வு தீவனம் சத்துக்கள் நிறைந்ததாக பார்த்துக்கொள்ளும் அதே வேளை அதனை காலை மாலை என்று பிரித்து வழங்கலாம்.

புற்களின் சத்து குறைவதாலும் அசையூன் வயிற்றில் வாழும் நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிப்படைவதாலும் ஏற்படும் அமில அதிகரிப்பை ஈடு செய்யச் சோடா உப்பு மற்றும் மக்னிசியம் பால் கொடுக்கலாம். தாது உப்புகளையும் கொடுக்க வேண்டும்.

## நோய் மேலாண்மை

கோடை காலத்தில் உணவின்றி கால்நடைகள் மெலிவதோடு நீர்ப்பீடன நோய் எதிர்ப்பு சக்தியையும் இழப்பதால் இலகுவில் நோய் தாக்கத்துக்கு உட்படுகின்றன. இதனால் கால்வாய் நோய் ஜகழுழுவ யனை அழரவாஸ கருங்காலி நோய் [black quarter] போன்றவற்றுக்கான தடுப்பூசிகளை தகுந்த நேரத்தில் போட வேண்டும். மேலும் சிறந்த அக ஒட்டுண்ணி மருந்துகளை சரியான அளவில் கொடுப்பதோடு புற ஒட்டுண்ணிகளை இல்லாது செய்யவும் வேண்டும். நீர் வற்றிய குளம் குட்டைகளில் ஒட்டுண்ணிப் பெருக்கம் அதிகம் காணப் படுவதால் அவற்றை அங்கு நீர் அருந்த விடக்கூடாது.

மேற்கூறிய சகல மேலாண்மை முறைகளையும் சரியாக கையாண்டு கோடை காலத்தில் கறவைமாடுகளில் ஏற்படும் வெப்ப அயர்ச்சியை குறைத்து சிறந்த உற்பத்திகளைப் பெறமுடியும்.



– காரைக்கவி கந்தையா பத்மானந்தன் –

# எங்கட ஆச்சி



இப்ப பாத்தம் எண்டால் எங்கடை ஆக்கள் அடிக்கடி அரசியல் பரப்பிலையும் சரி ஆன்மீகப் பரப்பிலையும் சரி இலக்கியப் பரப்பிலையும் சரி சமூகப் பரப்பிலையும் சரி பல இடங்களில யும் பல சந்தர்ப்பங்களிலையும் தகுதி எண்டு ஒரு சொல்லைப் பாவிக்கினம். எங்கடை அரசியலைப்பற்றிக் கதைக்க இல்லாட்டில் பேச இல்லாட்டில் எங்களுக்கெண்டு அரசியல் செய்ய அவருக்கு என்ன தகுதி இருக்குது? எங்கடை கோயில் திருப்பணி பற்றிப் பேச இல்லாட்டில் எங்கடை கோயில் திருப்பணி செய்ய வேணும் எண்டு இருக்கிற குழுவிலை இருக்கிறதுக்கு அவருக்கு என்ன தகுதி இருக்குது? ஆன்மிகம் பற்றிப் பேசுறதுக்கு இல்லாட்டில் ஆன்மீக வேலையள் செய்யிற துக்கு அவருக்கு என்ன தகுதி இருக்குது?

எங்கடை ஊரைப் பற்றி இல்லாட்டில் ஊரில நடக்கிற விசயங்களைப் பற்றி இல்லாட்டில் எங்கடை ஊரின்ரை அபிவிருத்தி பற்றிக் கதைக்க அவருக்கு என்ன தகுதி இருக்க்குது? எங்கடை நிறுவனத்திற்கு தலைவராவதற்கு இல்லாட்டில் எங்கடை நிறுவனத்துக்கு ஆலோசனை சொல்ல இல்லாட்டில் விமர்சிக்கிறதுக்கு அவருக்கு என்ன தகுதி இருக்குது ? எங்கடை இலக்கியம் பற்றி இல்லாட்டில் என்ரை இலக்கியம் பற்றிக் கதைக்கிறதுக்கு அவருக்கு என்ன தகுதி இருக்குது?

என்ரை பெட்டைக்கு மாப்பிளையா வாற துக்கு அவனிட்டை என்ன தகுதி இருக்குது? என்னை எதிர்த்துப் பேச இல்லாட்டில் என்னட்டை ஞாயம் பேசுறதுக்கு அவனிட்டை என்ன தகுதி இருக்குது? அவன் எல்லாம் என்ன தகுதியை வைச்சுக்கொண்டு எங்கடை சமூகம் இல்லாட்டில் எங்கடை சமூகத்தின்ரை அபிவிருத்தி பற்றிக் கதைக்கிறான்? என்ன தகுதியை வைச்சுக்கொண்டு அவன் அந்த வேலையைத் தன்னட்டை தரச் சொல்லிக் கேப்பான்?

இதெல்லாம் எங்கை எண்டாலும் எங் கடை ஆக்கள் ஒவ்வொருநாளும் கேக்கிற கேள்வியல் இல்லாட்டில் கேள்விப்படுகிற கேள்வியள் .உண்ணான தகுதி எண்டால் என்ன? தகுதி பற்றிப் பேசுறதுக்கு இல்லாட் டில் எழுதுதிறதுக்கு எல்லாம் என்னட்டை தகுதி இருக்குதா எண்டது என்ரை மனசைக் குடையிற பெரிய கேள்வி. தகுதி எண்டதுக்கு தகைமை, மதிப்பு, நல்லொழுக்கம், நடத்தை, பெருமை, பொருத்தம், மேன்மை, பண்பு எண்டு பல அர்த்தங்கள் இருக்குது எண்டு எங்கடை அப்பு சொன்னது ஞாபகம் இருக்குது. ஒரு மனுசனாப் பிறந்தவன் தனி மனிசனா இல்லாட்டில் சமூகமாக வாழ எண்டாலும் இந்தத் தகுதி தேவை எண்டு எங்கடை ஆச்சி சொல்லுவா.

தன்ரை அனுபவத்தில இந்தத் தகுதி எண்டது ஒண்டில் தானா வரும் இல்லாட்டில் தேடிப் பெற வேணும் எண்டுவா ஆச்சி. தானாக வாற தகுதி எண்டது பரம்பரை பரம் பரையாக பரம்பரை அலகுகளுக்காலை பாரம்பரியமாக வாறது. உதுக்கு உதாரணமாக எங்கடை மன்னர் பரம்பரையை சொல்ல லாம். அவையிட்டை அந்த தகுதி இருந்த படியாலதான் அவங்கள் பரம்பரை பரம்பரையா பல நூறு வருசங்களா நாடுகளை ஆண்டவங் கள் எண்டுவா.

இப்பிடியான பரம்பரைத் தகுதி தனிய மன்னர்களிட்டை மட்டும் எண்டு இல்லாமல் புலவர்கள், கலைஞர்கள், இசைஞர்கள், பாணர்கள், ஓவியர்கள், சிற்பிகள் எல்லா ரிட்டையும் இருந்தது எண்டதை பழைய இலக்கியங்கள் வரலாறுகளிலை இருந்து அறியிறம் எண்டிற அப்பு அதமாதிரி எங்கட ஊர்வழியையும் அப்பிடிக்கொத்த குடும்பங் களை பரம்பரை பரம்பரையாக நல்ல பண்புகளோடை இருக்கிறதைப் பாக்கலாம் எண்டுவார்.

தானாக வாற இப்படியான பரம்பரைத் தகுதி மாதிரி தேடி எடுக்கிற தகுதியும் இருக்குது. நல்ல முறையான கல்வி கேள்விகளிலை விண்ணர்களா இருக்கிறவையிட்டை கேட்டுப் படிக்கிறதால இல்லாட்டில் நல்ல பண்புகள் பழக்க வழக்கம் உள்ளவையோடை பழகி றதால இல்லாட்டில் எங்கடை பெரியாக்கள் ஆன்றோர்கள் முனிவர்கள் ஞானிகள் ஒரு மனுஷன் எப்படி வாழ வேணும் எண்டு சொன்ன விசயங்களை பின்பற்றி வாழுற தாலையும் இப்படியான தகுதிகளை எடுக்க லாம் எண்டுவா ஆச்சி.

இப்பிடித்தானாக வாற தகுதி எண்டான்னை இல்லாட்டில்தேடி எடுக்கிற தகுதி எண்டான்னை சாதி இன மத மொழி நிற பால் வயது நாடு எண்ட எல்லைகளை எல்லாம் கடந்தது. இப்படியான தகுதி உள்ளவையிட்டை ஆச்சி மேலே சொன்ன தகைமை, மதிப்பு, நல் லொழுக்கம், நடத்தை, பெருமை, பொருத்தம், மேன்மை, பண்பு எண்ட எல்லாம் தாரளாமாய் இருக்கும். அப்படிக்கொத்த குணங்கள் உள் ளவைதான் சக மனுசனை மனுசனா பாக்கிற மனிசப் பண்பு உள்ளவையாயும் மனிச நேயம் உள்ளவையாயும் மனிதாபிமானம் உள்ளவையாயும் இருப்பினம் எண்டுவா ஆச்சி.

எங்களில சிலரிட்டை இப்பிடிக்கொத்த மனிசப் பண்பு சார்ந்த தகுதி எண்டது பணத்தால இல்லாட்டில் பட்டங்களாலை இல்லாட்டில் பதவிகளாலை கிடைக்குது எண்ட ஒரு அபிப்பிராயம் இருக்குது. ஆனால் எத்தனையோ பணக்கார்களிட்டை இல்லாட் டில் படிச்ச ஆக்களிட்டை இல்லாட்டில் பதவி களிலை இருந்தவையிட்டை இருக்கிற வையிட்டை இப்படியான மனிசப் பண்பு இல்லாமை இருக்கிறதை அதாவது நாங்கள் எதிர்பார்க்கிற தகுதி இல்லாமை இருக்கிறதை நாங்கள் ஒவ்வொருநாளும் பாக்கிறம்.

எண்டபடியால மனிசப் பண்பு எனப்படும் மனித நேயம் இல்லாட்டில் மனிதாபிமானம் எண்ட தகுதி இல்லாத ஆக்களாலை தனி மனிசனாவோ இல்லாட்டில் சமூகமாகவோ தன்னும் சேர்ந்து வாழ ஏலாது. இப்பிடிக் கொத்த ஆக்களுக்கு தன்ரை சக மனிசனுக்கோ இல்லாட்டில் தன்ரை சமூகத்துக்கோ வழி காட்டுறது எண்டது ஏலாத விஷயம் கண்டி யளோ. எண்டபடியால அப்படிக்கொத்த ஆக்க ளுக்கு சமூக அபிவிருத்தி பற்றியோ அரசியல் பற்றியோ ஆன்மிகம் பற்றியோ இலக்கியம் பற்றியோ பேசுறது எண்டது ஏலாத ஒண்டா இருக்கும் எண்டது என்ரை அபிப்பிராயம் கண்டியளோ. சரி ..சரி இப்ப இதை எல்லாம் எழுதுதிறதுக்கு எனக்கு என்ன தகுதி இருக் குது எண்ட ஐமிச்சம் இப்ப உங்களில கன பேருக்கு வந்திருக்கும் எண்டு நினைக்கிறன.

# Malaysia Tour

## 5 DAYS 4 NIGHTS








### INCLUSION

- 04 Night stay in Kuala Lumpur
- Daily breakfast at hotel
- Return AirTicket
- Getting Highland tour with cable car
- City tour on arrival day
- Evening tour to twin tower
- Batu caves temple visit
- Putrajaya city tour

**LKR 148,000.00**
For Early Booking

**Travel Date: 19 - 23 May 2023**

**Semba Services (Pvt) Ltd.**
551A, Kasthuriyar Road ,Jaffna

+94 77 307 8799

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.04.2023இல் வெளியிடப்பெற்றது.